بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

தொகுதி 4

இதழ் 27

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

30 ஷவ்வால் 1440 ஹிஜ்ரி கமரி 04 வஃபா 1398 தப்லீக் ஹிஜ்ரி ஷம்ஸி
04 ஜூலை 2019


## அல்லாஹ்வின் கட்டளை

يَآ أَيُّهَا الَّذِينَ اٰمَنُوا
اتَّقُوا اللّٰهَ حَقَّ تُقٰتِهٖ
وَلَا تَمُوْتُنَّ اِلَّا وَاَنْتُمْ مُّسْلِمُوْنَ ○

நம்பிக்கை கொண்டோரே! இறைபக்தியை அதன் எல்லா நிபந்தனைகளுடன் ஏற்றுக் கொள்க. நீங்கள் முழுமையாக கட்டுப்பட்டு நடப்பவர்களாக இருக்கின்ற நிலையில் மட்டுமே, உங்களுக்கு மரணம் வர வேண்டும். (3:103)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**இஸ்லாத்தில் தற்காப்புப் போர்களும் பௌதீகப் போர்களும் ஆரம்பத்தில் அவசியத் தேவையாக இருந்தது. எதனால் எனில் அந்நாட்களில் இஸ்லாத்தின் பக்கம் அழைப்பவர்களுக்கு, ஆதாரங்கள் சான்றுகள் மூலம் பதில் தருபவர்களாக இருக்கவில்லை மாறாக வாளால் தரப்பட்டது ஆனால் இப்போது வாளால் பதில் தரப்படுவது இல்லை மாறாக பேனா மற்றும் சான்றுகள் மூலம் இஸ்லாத்தின் மீது குறைகூறப்படுகிறது இதன் காரணமாகவே இந்த காலத்தில் வாளின் பணியை பேனாவின் மூலம் பெறவும் மேலும் எழுத்தின் மூலம் எதிர் கொண்டு எதிரிகளைத் தோல்வி அடையச் செய்யவும் இறைவன் விரும்பி உள்ளான்**

**நான் பேனாவின் கவசம் அணிந்து இந்த அறிவியல் மற்றும் அறிவு வளர்ச்சியின் இந்த செயல் திடலில் இறங்கி இஸ்லாத்தின் ஆன்மீக தீரம் மற்றும் உட்புற ஆற்றலின் அதிசயத்தைக் காண்பிக்க இறைவன் எனக்குக் கவனமூட்டி உள்ளான்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

### இஸ்லாத்திற்குப் போரின் இரண்டு ஆற்றல்கள் வழங்கப்பட்டிருந்தன

இப்போது பாருங்கள் இந்த ரிபாத் என்ற இதே சொல் எதிரிகளிடமிருந்து பாதுகாக்க எல்லைகளில் கட்டப்படும் குதிரைகளுக்குச் சொல்லப்படும். இதைப் போன்றே இந்த சொல் போருக்கு பயிற்சி பெற்று தயாராகும் ஆன்மாவிற்கும் சொல்லப்படும். அது மனிதனின் உள் இருந்தவாறு சய்த்தானுடன் எப்போதும் நடைபெறுகிறது. இஸ்லாத்திற்கு போரின் இரண்டு ஆற்றல்கள் வழங்கப்பட்டிருப்பது என்பது முற்றிலும் உண்மையாகும், ஒரு ஆற்றல் இதுவாகும் முதலில் தற்காப்பு மற்றும் பழிவாங்குவற்காக பயன்படுத்தப்பட்டது. அதாவது அரேபிய இணைவைப்பாளர்கள் துன்புறுத்தியபோதும் கஷ்டங்கள் தந்தபோதும் ஓரயிரம் போர் வீரர்கள் ஒரு லட்சம் நிராகரிப்பவரை எதிர்த்து தீரத்தினை காண்பித்தார்கள் மேலும் அனைத்து சோதனைகளிலும் அந்த தூய ஆற்றல் மற்றும் கம்பீரத்தின் சான்றை கொடுத்தார்கள்.அந்த காலம் சென்றுவிட்டது மேலும் ரிபாத் என்ற சொல்லில் எந்த தத்துவம் வெளிப்படையான போரின் ஆற்றல் மற்றும் போரின் வித்தைகள் மறைவாக இருந்ததோ அது வெளிப்பட்டுவிட்டது.

### இந்த காலத்தில் போரின் உட்புற முன்மாதிரி காண்பிக்கப்படவேண்டியது நோக்கமாகும்

இப்போது நாம் இருக்கும் இந்த காலத்தில் வெளிப்படையான போரின் அவசியம் மற்றும் தேவை இல்லை, மாறாக இந்த இறுதி நாட்களில் உள்புற போரின் முன்மாதிரி காட்டப்படுவது நோக்கமாகும் ஏனெனில் இப்போது உள்புற வெளியேற்றம் மற்றும் உண்மையை விட்டுவிடுதலுக்கான பெரும் பெரும் சாதனங்களும் ஆயுங்களும் உருவாக்கப்பட்டுள்ளன, எனவே அதனை எதிர்கொள்ள அதை போன்ற ஆயுதங்கள் அவசியமாகும், ஏனெனில் இன்றைய நாட்கள் அமைதி மற்றும் சாந்தியின் காலமாகும் மேலும் நமக்கு அனைத்துவித சுகபோகம் மற்றும் அமைதி கிடைத்துள்ளது. ஒவ்வொரு மனிதரும் தமது மார்க்கத்தை பரப்புவது மற்றும் தப்லீக் மற்றும் கட்டளைகளை நிறைவேற்றுவதை சுதந்திரமாக செய்யமுடியும். பிறகு இஸ்லாம் இது உண்மையில் அமைதியை கொண்டதாகும் மாறாக உண்மையான அமைதி மற்றும் சாந்தி மற்றும் நிம்மதியை பரப்புக்கூடியதே இஸ்லாம் ஆகும் ஏனெனில் அமைதி மற்றும் சுதந்திரத்தில் அந்த முதல் முன்மாதிரியை காண்பிப்பதை விரும்பக்கூடியதாக இந்த காலம் இருக்குமா? எனவே இன்றைய நாட்களில் அதே இரண்டாவது முன்மாதிரி அதாவது ஆன்மீக போர் நோக்கமாகும் ஏனெனில் கெ ஹல்வா சூ எக்பார் ஹூர்தன்து பஸ் (அதாவது என்ன அல்வா இது ஒருமுறை உண்டால் போதுமானது).

### தற்போதைய காலத்தில் போர்

இன்னுமோர் விசயம் உள்ளது அந்த முதல் முன்மாதிரியை காண்பிப்பதில் மற்றும் ஓர் விசயமும் காரணமாகும். அதாவது அப்போது வீரத்தை வெளிப்படுத்துவதும் நோக்கமாக இருந்தது அது அப்போதைய உலகில் அனைத்திலும் அதிகமாக புகழ் மற்றும் நேசத்தின் அளவீடாகக் கருதப்பட்டது மேலும் இப்போது போர் ஓர் வித்தையாக ஆகிவிட்டது தூரத்தில் இருந்துகொண்டும் ஒரு மனிதன் பீரங்கி மற்றும் துப்பாக்கியால் சுடமுடியும்.

இந்த இரண்டிலும் உண்மையான வீரர், எவர் வாளுக்கு முன்னால் நெஞ்சை நிமிர்த்துவாரோ அவரே ஆவார். மேலும் இன்றைய நாட்களில் போர் கலை என்பது திரைமறைவு கோழைகளுடையது ஆகும் , இப்போது வீரத்திற்கு வேலை இல்லை மாறாக எந்த மனிதன் போரின் நவீன ஆயுதங்கள் மற்றும் புதிய பீரங்கி போன்றவைகளை வைத்துள்ளாரோ மேலும் அதனைப் பயன்படுத்த

*(தொடர்ச்சி 20 வது பக்கம்...)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**அவன் இந்த தலைமையகத்தை வழங்கியிருப்பது முழுக்க முழுக்க இறைவனது அருளேயாகும்**

**எதிரி தனது வட்டத்தில் இறைவன் நமக்கு வழங்கிய அருட்களையும் பரக்கத்துகளையும் நம்மிடமிருந்து பறிக்க விரும்பினர். அல்லாஹ் முன்பை விட அதிகமாக மேலும் பல மடங்கு அதிகமாக இந்த பள்ளிவாசல் மற்றும் தலைமையகத்தின் முன்னேற்றத்திற்கான காட்சியைக் காட்டினான். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முன்னேற்றம் அல்லாஹ்வின் அருளால் உள்ளதேயொழிய எந்த அரசாங்கமும் அதன் முன்னேற்றத்தைத் தடுக்க முடியாது என்பதையும் மேலும் எந்தவொரு அரசாங்கத்தையும் ஜமாஅத் தனது முன்னேற்றத்திற்கு உதவியாகக் கருதவில்லை என்பதையும் அவர்கள் அறிய மாட்டார்கள்**

**நாம் அல்லாஹ்வின் கட்டளைகளின்படி செயலாற்றிக் கொண்டிருக்கும்வரையிலும் அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கும் வரையிலும் அல்லாஹ்வின் திருப்திக்கு வாரிசுகளாகி அந்த முன்னேற்றங்களின் பங்குதாரர்களாக ஆகி விடுவோம்**

**எவருக்கு அல்லாஹ் இந்த புதிய ஊரில் வசிப்பதற்கு நற்பாக்கியம் வழங்கி இருக்கின்றானோ அவர்களும் தலைமையகம் உருவானதன் காரணத்தால் இங்கு அருகில் வந்த புதிய வசிப்பிடத்தில் குடியேற முயற்சி செய்து கொண்டிருக்கும் மக்களும் தங்களின் நிலைமையை எப்படி ஆக்கிக் கொள்ள வேண்டுமென்றால், இந்தப் பகுதி மக்களுக்கு அவர்கள் மூலம் அஹ்மதிய்யத் மற்றும் இஸ்லாத்தின் உண்மையான முகம் தென்பட வேண்டும்**

**அல்லாஹ்விற்கு நாம் செலுத்துகின்ற நன்றியுணர்வின் தேட்டம் என்பது நம்முடைய பேச்சுக்களும், நம்முடைய செயல்களும் நமது போதனைகள் மற்றும் நமது செயல்கள் ஒன்றோடு ஒன்று ஒன்றிணைந்து இருக்க வேண்டும் என்பதை எதிர்பார்க்கிறது**

**இந்த தலைமையகம் உருவானதற்குப் பிறகு அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துவதற்குரிய உரிமைகளை நிறைவேற்றுவதன் ஒரு வகை என்னவென்றால் எங்கு நமது இறைவணக்கத்தின் தரத்தை உயர்த்துவது நமக்கு அவசியமாக இருக்கின்றதோ அங்கு ஒழுக்கங்களின் தரங்களையும் உயர்த்துவது அவசியமாகும். இந்த ரமலானை இந்த அடிப்படையிலும் தனித்தன்மைவாய்ந்ததாக ஆக்கிக் கொள்ளுங்கள். நாம் நமது குடும்பத்தையும், இந்த மாதத்தின் பரக்கத்துகளால் நிரப்ப வேண்டும்**

**உலகத்தின் இந்தப் பகுதியில் அல்லாஹ் தலைமையகம் கட்டுவதற்கான நற்பாக்கியத்தை வழங்கியுள்ளான். இந்த பகுதி ஏகத்தவத்திலிருந்து காலியாக உள்ளது. இன்னும் சொல்வதென்றால் இணை வைப்பால் நிறைந்துள்ளது. இங்கிருந்து ஒரு புதிய உணர்வுடன், ஏகத்துவத்தைப் பரப்புவதற்கான பணிகளை செய்யுங்கள். மேலும் நபி (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரின் உரிமையை நிறைவேற்றுங்கள். அடுத்து அந்த நாட்களும் வரும். அதாவது பெரும் பெரும் ஊர்களும் நகரங்களும் அல்லாஹ்வின் ஏகத்துவத்தை அறிவிக்கக்கூடியதாக இருக்கும். இன்று எந்த மக்கள் நபி (ஸல்) அவர்களுக்கு எதிராகத் தமது வாயால் பேசுகின்றார்களோ, உளறுகின்றார்களோ அவர்கள் அதற்குப் பகரமாக நபி (ஸல்) அவர்களின் கொடியின் கீழ் வந்து நின்று பெருமிதம் கொள்ளக் கூடியவர்களாக இருப்பார்கள். மேலும் அன்னார் மீது ஸலவாத் ஓதக் கூடியவர்களாக இருப்பார்கள்**

**ஜமாஅத்தின் முன்னேற்றம் மற்றும் உலகத்தின் இந்தப் பகுதியில் தலைமையகம் கட்டியதன் நோக்கம் நிறைவேறுவதற்காகவும் துஆ செய்யுங்கள். மிக அதிகமாக துஆ செய்யுங்கள். மேலும் எதிரிகளின் அனைத்துத் திட்டங்களும் தூள் தூளாக்கப்படுவதையும் நாம் பார்க்க வேண்டும். ரப்வா செல்வதற்குரிய வழிப்பாதையும் திறக்கட்டும். காதியான் மஸீஹினுடைய தங்குமிடமாக இருந்தது. அங்கு திரும்புவதற்கான வழிகளும் திறக்கட்டும். மக்கா மதீனா செல்வதற்கும் வழிகள் திறக்கட்டும். ஏனென்றால் அது நமது எஜமானர் ஹஸ்ரத் முஹம்மது முஃதபா (ஸல்) அவர்களின் நகரமாகும். மேலும் இஸ்லாத்தின் நிரந்தர தலைமையகமாகும்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத்திலுள்ள முபாரக் பள்ளிவாயிலில் 17 மே 2019** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1398 -ஆம் ஆண்டு **ஹிஜ்ரத்** மாதம் **17 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹ். மஸ்ஜிது திறப்பிற்காக வைக்கப்பட்டிருந்த பலகையின் திரையை அகற்றியதன் மூலம் திறப்பு நிகழ்ந்தது. இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் ரப்வாவில் மஸ்ஜிது முபாரக்கை திறந்து வைத்தார்கள். அப்போது பள்ளி திறப்பிற்கு முன் இரண்டு ரக்அத் நஃபில் தொழுவதற்கான ஏற்பாடு இருக்க வேண்டும் என்று கூறியிருந்தார்கள். ஆனால் அப்போது அதற்கான ஏற்பாடு நடைபெற முடியாமல் போனது. எனவே அன்னார் நாம் நன்றி சஜ்தா செய்வோம் என்று கூறினார்கள்.

(குத்பாத்தே மஹ்மூது தொகுதி 32 பக்கம் 48,49 – குத்பா ஜுமுஆ 23 மார்ச் 1951)

பொதுவாக மரபு என்னவென்றால், நான் திரையை அகற்றிய பிறகு துஆ செய்வேன். இன்றும் இதே முறைப்படி அமல் செய்தவாறு துஆவிற்குப் பகரமாக இப்போது நான் நன்றி சஜ்தா செய்வேன். நீங்கள் அதில் கலந்து கொள்ளுங்கள். அல்லாஹ் நமக்கு ஒரு சிறிய தலைமையகத்தை வழங்கியுள்ளான். மேலும் ஒரு பள்ளிவாசலை வழங்கியுள்ளான். இதன் பிறகு குத்பா வழக்கம் போல் ஆரம்பமாகும். இப்போது நன்றி சஜ்தா செய்யுங்கள். (இதற்குப் பிறகு ஹுஸூர் அவர்களுடன் அனைவரும் நன்றி சஜ்தா செய்தனர்)

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ- بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ-مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ-
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ-

قُلْ أَمَرَ رَبِّيْ بِالْقِسْطِ وَأَقِيْمُوْا وُجُوْهَكُمْ عِنْدَ كُلِّ مَسْجِدٍ وَّادْعُوْهُ مُخْلِصِيْنَ لَهُ الدِّيْنَ
كَمَا بَدَأَكُمْ تَعُوْدُوْنَ۔ فَرِيْقًا هَدٰى وَفَرِيْقًا حَقَّ عَلَيْهِمُ الضَّلٰلَةُ إِنَّهُمُ اتَّخَذُوا الشَّيٰطِيْنَ
أَوْلِيَآءَ مِنْ دُوْنِ اللّٰهِ وَيَحْسَبُوْنَ أَنَّهُمْ مُّهْتَدُوْنَ۔ يٰبَنِيْ اٰدَمَ خُذُوْا زِيْنَتَكُمْ عِنْدَ كُلِّ مَسْجِدٍ
وَّكُلُوْا وَاشْرَبُوْا وَلَا تُسْرِفُوْا إِنَّهٗ لَا يُحِبُّ الْمُسْرِفِيْنَ-

இந்த வசனங்களின் பொருள் என்னவென்றால், நீர் கூறுவீராக! என் இறைவன் எனக்கு நீதியை (கடைபிடிக்குமாறு) கட்டளையிட்டுள்ளான். மேலும் நீங்கள் வணக்கத்தளம்

ஒவ்வொன்றிலும் உங்கள் முகங்களை நேரான திசையில் வைத்துக் கொள்ளுங்கள். மேலும் மார்க்கத்தில் உங்களை அவனுக்காக களங்கமற்றவர்களாய் ஆக்கிக் கொண்ட நிலையில் அவனையே அழையுங்கள். அவன் உங்களைத் தோற்றுவித்தது போன்று நீங்கள் அவனிடமே திரும்புவீர்கள்.

ஒரு பிரிவினருக்கு அவன் நேர்வழியை வழங்கினான். ஆனால் மற்றொரு பிரிவினருக்கோ தவறான வழியில் செல்வது உரித்தாகி விட்டது. ஏனென்றால் அவர்கள் அல்லாஹ்வை விட்டு விட்டு ஷய்த்தான்களைத் தங்கள் நண்பர்களாக்கிக் கொண்டு தாங்கள் நேர்வழியினை பெற்று விட்டோம் என்று நினைத்துக் கொள்கின்றனர்.

ஆதமின் மக்களே! ஒவ்வொரு வணக்கத்தளத்திடத்தும் நீங்கள் உங்கள் அழகை மேற்கொள்ளுங்கள். உண்ணுங்கள்; பருகுங்கள். வீண் விரயம் செய்யாதீர்கள். ஏனென்றால் அவன் வீண் விரயம் செய்பவர்களை நேசிப்பதில்லை. **(7:30–32)**

அல்ஹம்துலில்லாஹ். இன்று இஸ்லாமாபாத்தில் இஸ்லாமாபாத்திலுள்ள இந்த பள்ளிவாசலில் அல்லாஹ் நமக்கு ஜுமுஆ தொழுவதற்கான நற்பாக்கியத்தை வழங்கிக் கொண்டிருக்கின்றான். சில ஜுமுஆக்களுக்கு முன்பாக நான் தலைமையகம் இஸ்லாமாபாதில் இடம் மாற்றப்பட்டிருப்பது தொடர்பாக கூறியிருந்ததுபோன்று மஸ்ஜிது ஃபஸலுடன் அமைந்துள்ள அலுவலகங்கள் போன்றவற்றின் ஏற்பாடுகளில் நமக்கு நிறைய கஷ்டங்களை எதிர்கொள்ள நேரிட்டது என்றும் மேலும் இப்போது அலுவலகத்திற்கென்று மிகச் சிறந்த மற்றும் திறந்த வெளி இடத்திற்கான தேவை உள்ளது என்றும் நான் கூறியிருந்தேன். அது இப்போது அல்லாஹ்வின் அருளால் இஸ்லாமாத்திலுள்ள இந்த கட்டுமானத் திட்டங்கள் முழுமையடைந்ததற்குப் பிறகு போதுமான அளவிற்குத் தேவை பூர்த்தியாகி விட்டது.

அதேபோன்று ஜமாஅத்திற்குத் தொண்டாற்றக் கூடியவர்கள் மற்றும் அலுவலகங்களில் பணியாற்றக் கூடியவர்களின் தேவைக்கேற்ப தங்குமிடமும் அமைக்கப்பட்டு விட்டது. அதே போன்று காலத்தின் கலீஃபாவின் தங்குமிடமும் கட்டப்பட்டு விட்டது. காலத்தின் கலீஃபாவின் தங்குமிடத்துடன் பள்ளிவாசலும் இருப்பது அவசியமாகும். ஏனென்றால் அப்போதுதான் காலத்தின் கலீஃபாவிற்குப் பின்னால் தொழுகைகளை மக்களால் எளிதாக நிறைவேற்ற முடியும்.

அதுமட்டுமல்ல, தர்ஸ் போன்ற பணிகளையும் காலத்தின் கலீஃபா எளிதாகச் செய்ய முடியும். ஒரு வகையில் சம்பிரதாயமாக நாம் இந்த ஜுமுஆவுடன் பள்ளியை திறந்திருக்கின்றோம். ஆனால் செயல் ரீதியில் நாம் இங்கு இடம்பெயர்ந்த உடனேயே தொழுகைகள் மற்றும் இதர நிகழ்ச்சிகள் ஆரம்பமாகி விட்டன. வெளியிலிருந்து குத்தாம் அத்ஃபால், லஜ்னாக்களின் குழுக்கள் வந்த வண்ணம் இருந்தன. மேலும் ஒரு பெரும் எண்ணிக்கையில் அதில் கலந்து கொள்ளக் கூடிய மக்கள் வந்து கொண்டிருந்தனர்.

எனவே இதே பள்ளிவாசலில் அவர்களுடன் பல சபைகளும் கூட்டப்பட்டன. அவர்களுடன் நிகழ்ச்சிகள் மற்ற சிறிய அறைகளில் நடந்தன. இந்தப் பள்ளிவாசல் ஃபஸல் பள்ளிவாசலிலிருந்து சுமார் நான்கு மடங்கு அதிக பரப்பளவு கொண்டதாகும். ஆனால் இதுவரை வந்த மக்களின் குழுக்களை வைத்து அனுமானித்து பார்த்த போது இந்த பள்ளிவாசலும் சிறிதாகி விட்டது என்றே தெரிய வந்துள்ளது. ஆனால் அத்துடன் கிப்லாவை நோக்கி ஒரு மல்டிபர்பஸ் அறை ஒன்று கட்டப்பட்டுள்ளது. அதில் அதிகமான மக்கள் தொழுது வந்தார்கள். அதில் போதுமான இடம் உள்ளது.

எவ்வாறிருப்பினும் இந்த விஷயங்களைக் கூறுவதன் நோக்கம் என்னவென்றால், அல்லாஹ்வின் அருளால் யூ.கே ஜமாஅத்திலும் உலகத்தின் பல்வேறு நாடுகளிலும் பள்ளிவாசல்கள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும் அல்லாஹ்வின் அருளால் கடந்த **10, 15** ஆண்டுகளில் ஜமாஅத்திற்கு மஸ்ஜிதுகள் கட்டுவதன் பக்கம் சிறப்பான கவனம் ஏற்பட்டுள்ளது. இதற்கு நான் மஸ்ஜிது முபாரக் என பெயர் சூட்டியுள்ளேன்.

அந்த அடிப்படையில் இதற்குரிய முக்கியத்துவம் என்னவென்றால், காலத்தின் கலீஃபாவின் தங்குமிடமும் இதில் தான் உள்ளது. தொண்டாற்றக் கூடியவர்களில் சுமார் **29, 30** நபர்களின் தங்குமிடமும் இங்கு உள்ளது. நல்ல உகந்த வீடுகளின் வடிவிலும் மேலும் எல்லா அடிப்படை அலுவலகங்களும் இங்கு உள்ளன. பொதுவாக என்னுடன் தினமும் அதிகமாக தொடர்புடைய அலுவலகங்களும் இங்கு அமைந்துள்ளன. அதாவது இந்த இடம் மற்றும் இந்த பள்ளிவாசல் இந்த அடிப்படையில் தலைமையக பள்ளிவாசல் ஆகும். எனவே இதற்கு இன்னும் அதிக முக்கியத்துவம் இருக்கிறது. இந்த அடிப்படையில் இந்த பள்ளிவாசல் மஸ்ஜிது முபாரக்கின் நிழலைக் கொண்டதாகவும், அல்லாஹ்வின் அருளை ஈர்க்கக் கூடியதாகவும், மேலும் எல்லா வகையிலும் வாழ்த்துக்குரியதாகவும் இதனை அல்லாஹ் ஆக்குவானாக.

இதற்கு பெயர் வைப்பதற்கான பல்வேறு ஆலோசனைகள் கூறப்பட்ட போது ஆனால் அதற்கு முன்பு பல பெயர்கள் எனது நினைவுக்கு வந்து சென்றன. ஆலோசனைகளும் நடைபெற்று வந்தன. சில பெயர்களும் எடுத்துக் கூறப்பட்டன. ஆனால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இறங்கிய இல்ஹாம் எனக்கு முன் வந்தது. அதன் காரணமாக இந்த இடத்திற்கு இந்த பெயர் வைக்கப்பட்டுள்ளது. அந்த இல்ஹாம் இதுவாகும்.

"مُبَارِكٌ وَّمُبَارَكٌ وَّكُلُّ اَمْرٍ مُّبَارَكٍ يُّجْعَلُ فِيْهِ"

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சொற்களில் இதன் பொருள் என்னவென்றால், இந்த பள்ளிவாசல் அருட்களை வழங்கக் கூடியதாகவும், அருட்களைக் கொண்டதாகவும் உள்ளது. மேலும் ஒரு விவகாரம் இந்த இடத்தில் செய்யப்படும்.

**(தஸ்கிரா பக்கம் 83 பதிப்பு 4)**

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் காதியானில் என்ன என்ன துஆக்களைச் செய்தார்களோ மேலும் அன்னாருக்கு இருந்த ஆசைகள் மற்றும் துடிப்புகள் இஸ்லாத்தைப் பரப்புவதாக அமைந்திருந்தன. இஸ்லாம் பரவி விடுவதற்கும், மேலோங்குவதற்கும் துஆக்கள் செய்யப்பட்டன. அந்த விஷயங்கள் அனைத்தும் இந்த பள்ளிவாசலையும் சென்றடையட்டுமாக. இங்கிலாந்து மற்றும் ஐரோப்பா மற்றும் உலகின் அனைத்து நாடுகளுக்கும் இங்கிருந்து ஏகத்துவத்தைப் பரப்புவதற்கும் மேலும் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்கும் இந்தப் பள்ளிவாசல் மற்றும் இந்த தலைமையகம் எப்போதும் நிலைபெற்றிருக்க வேண்டும்.

இங்கு தலைமையகம் வந்திருப்பது ஒரு வகையில் அனைவருக்கும் வாழ்த்துக்கள். அஹ்மதிய்யா கிலாஃபத்தின் சார்பாக நடைபெறக்கூடிய அனைத்து திட்டங்களும் எப்போதும் அல்லாஹ்வின் அருள் மற்றும் பரக்கத்துகளை ஈர்க்கக் கூடியதாக இருந்து வந்துள்ளது. மேலும் அல்லாஹ்வின் பார்வையில் எந்த அருட்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய பள்ளிவாசலுடன் தொடர்புடையனவாக இருந்தனவோ அவை இந்த பள்ளிவாசலுக்கும் கிடைத்து வரட்டுமாக.

எனக்கு இந்த விஷயம் தெரியாது. நேற்று நான் எனக்கு முன் இந்த விஷயம் வந்தது. அதாவது ரப்வா வசிக்கும் இடமாக ஆகத் தொடங்கியபோது அப்போதும் கூட ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் முபாரக் பள்ளிவாசல் கட்டுமானத்தின் போது இதைத்தான் கூறினார்கள். இந்த பள்ளிவாசல் காதியானிலுள்ள முபாரக் பள்ளிவாசலின் பிரதிநிதியாகவும் அதன் நிழலாகவும் ஒப்புமையைக் கொண்டதாகும்.

(குத்பாத்தே மஹ்மூது தொகுதி 30 பக்கம் 316 – குத்பா ஜுமுஆ 30 செப்டம்பர் 1949)

அதாவது ரப்வாவிலுள்ள முபாரக் பள்ளிவாசல் இதைக் கொண்டதாக இருக்கும். எவ்வாறிருப்பினும் அங்கு நீண்ட காலம் தொண்டாற்றி வந்துள்ளோம். இப்போதும் கூட அங்கு தலைமையக அலுவலகங்கள் உள்ளன. ஆனால் கடந்த 35 வருடங்களில் ஹிஜ்ரத்தின் காரணமாக இங்கும் தேவைகள் இருந்தன.புதிய கட்டிடங்களுக்கும், புதிய விஷயங்களுக்கும், புதிய அலுவலகங்களும் மற்றும் பள்ளிவாசலுக்குமான தேவை இருந்து வந்தது. நாட்டின் சட்டங்களின் காரணமாக அஹ்மதிய்யா கிலாஃபத்திற்கு ரப்வாவிலிருந்து ஹிஜ்ரத் செய்ய நேரிட்டது.

பின்னர் அல்லாஹ் இங்கு தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக முன்பை விட அதிகமாக முன்னேற்றங்களின் வாசல்களைத் திறந்து தந்தான். அல்லாஹ் இதன் பரந்துபட்ட தன்மையை மேலும் அதிகரிப்பானாக. நமக்கு அல்லாஹ்தான் இதனை வழங்கியுள்ளான். எதிரி தனது வட்டத்தில் இறைவன் நமக்கு வழங்கிய அருட்களையும் பரக்கத்துகளையும் நம்மிடமிருந்து பறிக்க விரும்பினர். அல்லாஹ் முன்பை விட அதிகமாக மேலும் பல மடங்கு அதிகமாக இந்த பள்ளிவாசல் மற்றும் தலைமையகத்தின் முன்னேற்றத்திற்கான காட்சியைக் காட்டினான். தமது வட்டத்தில் ஜமாஅத்துடைய எதிர்காலம் மற்றும் நற்பாக்கியம் ஆகியவற்றிற்கு நாமே சொந்தக்காரர்கள் என்று எண்ணினார்கள்.

அதனுடைய நிலை எப்படி இருந்ததென்றால், அறிவீனத்தின் நிலை இதுவாகும். யாரோ ஒருவர் எனக்குக் காட்டினார். சமூக வளைதலங்களில் ஒரு கட்சியின் அரசியல்வாதி இந்த கலந்துரையாடலை நடத்திக் கொண்டிருந்தனர். ஒரு நிமிடம் இருந்தது. மேலும் கருத்துக்களும் தெரிவித்து வந்தனர்.

அவர்கள் கூறினார்கள்: எங்களது மக்கள் Party இருந்தவரை நாங்கள் அஹ்மதிய்யா ஜமாஅத் மீது தடையை விதித்திருந்தோம். மேலும் அவர்களை பாகிஸ்தானில் வளர விடாமல் தடுத்திருந்தோம். ஆனால் இப்போது புதிதாக வந்த அரசாங்கமோ அஹ்மதிகள் மற்றும் காதியானிகளுக்கு இஸ்லாமாபாத்தில் தலைமையகம் கட்டுவதற்கு அனுமதி தந்து விட்டது. இதுதான் அவர்களின் அறிவின் நிலையாக இருக்கின்றது. சில காலத்திற்கு முன்பும் அவர்களின் ஒரு அரசியல்வாதி இதேபோன்று அறிவீனமான வாக்குமூலம் ஒன்றைக் கொடுத்தார். பின்னர் தவறிழைத்து விட்டதாகவும், நான் சரியான முறையில் புரியவில்லை என்றும் கூறினார். எவ்வாறிருப்பினும் இது இந்த உலகவாதிகளின் சிந்தனையாகும்.

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முன்னேற்றம் அல்லாஹ்வின் அருளால் உள்ளதேயொழிய எந்த அரசாங்கமும் அதன் முன்னேற்றத்தைத் தடுக்க முடியாது என்பதையும் மேலும் எந்தவொரு அரசாங்கத்தையும் ஜமாஅத் தனது முன்னேற்றத்திற்கு உதவியாக கருதவில்லை என்பதையும் அவர்கள் அறிய மாட்டார்கள். நாம் அல்லாஹ்வின் கட்டளைகளின்படி செயலாற்றிக் கொண்டிருக்கும்வரையிலும் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கும் வரையிலும் அல்லாஹ்வின் திருப்திக்கு வாரிசுகளாகி அந்த முன்னேற்றங்களின் பங்குதாரர்களாக ஆகி விடுவோம்.

எனவே நாம் நமது நிலைகளை ஆய்வு செய்து கொண்டிருப்பது அவசியமாகும். எவருக்கு அல்லாஹ் இந்த புதிய ஊரில் வசிப்பதற்கு நற்பாக்கியம் வழங்கி இருக்கின்றானோ அவர்களும் தலைமையகம் உருவானதன் காரணத்தால் இங்கு அருகில் வந்த புதிய வசிப்பிடத்தில் குடியேற முயற்சி செய்து கொண்டிருக்கும் மக்களும் தங்களின் நிலைமையை எப்படி ஆக்கிக் கொள்ள வேண்டுமென்றால், இந்தப் பகுதி மக்களுக்கு அவர்கள் மூலம் அஹ்மதிய்யத் மற்றும் இஸ்லாத்தின் உண்மையான முகம் தென்பட வேண்டும். நிச்சயமாக இஸ்லாமாபாத்தில் ஒரு நீண்ட காலமாக நம்முடைய வாழ்க்கையை அர்ப்பணித்தவர்களும் ஊழியர்களும் வசித்து வருகின்றனர். இங்கு வசிக்கக்கூடிய மக்கள் அந்த வகையில் அஹ்மதிகளை அறிந்தவர்களாக இருக்கின்றனர். மாநாடுகளின் காரணமாகவும் இந்தப் பகுதி அஹ்மதிய்யத்தைப் பற்றி அறிந்துள்ளது.

2004 ஆம் ஆண்டு வரை இங்கு மாபெரும் மாநாடுகள் நடந்து வந்துள்ளன. ஆனால் தற்போது ஹால்ட்டன் நகரத்தில் நடந்து வருகிறது. அதுவும் அருகில் தான் உள்ளது. ஆனால் தற்போது ஒரு புதிய வடிவம் இங்குள்ள வசிப்பிடம் பெற்றிருக்கின்றது. இந்த அடிப்படையில் இங்குள்ள உள்ளூர் வாசிகளும் வேறொரு பார்வையுடன் நம்மைப் பார்ப்பார்கள். திடீரென அஹ்மதிகள் இங்கு வீடுகள் வாங்கத் துவங்கி விட்டார்கள் என்று இங்குள்ள உள்ளூர் வாசிகளுக்கு உணர்வு ஏற்பட்டுள்ளது. உங்களுடைய கலீஃபா இருக்கின்றாரே அல்லது ஜமாஅத் தலைவர் இங்கு வந்ததன் காரணமாக திடீரென உங்களின் கவனம் இந்த ஊரின் பக்கம் ஏற்பட்டுள்ளது என அவர்கள் கூறவும் செய்கின்றனர்.

எனவே இதன் காரணமாக உங்களது முன்னுதாரணம் முன்பை விடச் சிறந்ததாக இருக்க வேண்டும். மேலும் அது அவர்களின் மீது தனது நல்ல தாக்கத்தையும் ஏற்படுத்தும். நம்முடைய சப்தத்தின் காரணமாகவோ, அல்லது நமது போக்குவரத்தின் ஒழுங்கற்றத்தன்மையின் காரணமாகவோ, அல்லது வேறு ஏதாவதொரு காரணமாகவோ அண்டை அயலார்கள் தொந்தரவுக்கு ஆளானால் நாம் ஒரு தவறான தூதுச் செய்தியை இங்கு வசிக்கக் கூடியவர்களுக்கு வழங்கக் கூடியவர்களாக இருப்போம். நாம் நமது செயல்களால் இஸ்லாத்தின் சரியான தூதுச் செய்தியை வழங்கவில்லை என்றால் அல்லாஹ்வின் பெயரால் அவனுக்கு வழங்கக்கூடிய நன்றி உணர்வு என்பது வெறும் வாய்பேச்சாக இருக்கும்.

அல்லாஹ்விற்கு நாம் செலுத்துகின்ற நன்றியுணர்வின் தேட்டம் என்பது நம்முடைய பேச்சுக்களும், நம்முடைய செயல்களும் நமது போதனைகள் மற்றும் நமது செயல்கள் ஒன்றோடு ஒன்று ஒப்புமையாக இருக்க வேண்டும் என்பதை எதிர்பார்க்கிறது. நாம் ஒன்றைக் கூறி விட்டு வேறொன்றைச் செய்தால் அது நீதியல்ல. அல்லாஹ் நமக்குத் திருக்குர்ஆனிலும் பள்ளிவாசலின் அடிப்படையில் வழிகாட்டல்கள் வழங்கியுள்ளான். நான் ஓதிய வசனங்களில் அல்லாஹ் மிக முக்கிய விஷயத்தின் பக்கம் கவனமூட்டியுள்ளான். அந்த விஷயங்களின் பக்கம் நாம் கவனம் செலுத்தினால் எங்கு நாம் இறைவனுக்குய உரிமையைச் செலுத்தக் கூடியவர்களாக இருப்போமோ அங்கு அவனது படைப்பினங்களுக்குரிய உரிமையை செலுத்தக் கூடியவர்களாக இருப்போம்.

இந்த வசனங்களில் அல்லாஹ் நம்பிக்கையாளர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் தெளிவான பாதையைக் காட்டி விட்டான். அல்லாஹ் கூறுகின்றான்: நீங்கள் அல்லாஹ்வின் திருப்தியைப் பெற விரும்புகின்றீர்கள் என்றால் உங்களது ஈமானையும் உங்களது மார்க்கத்தையும் அல்லாஹ்விற்காகக் களங்கமற்றதாக ஆக்கிக் கொள்ளுங்கள். இதை நீங்கள் செய்யவில்லை என்றால் உங்கள் முன்னேற்றம் நடைபெறாது. மாறாக, நீங்கள் வழிகேட்டின் குழியில்

சென்று வீழ்வீர்கள். பள்ளிவாசலின் நோக்கங்களை முழுமை செய்ய வேண்டும். அப்போதுதான் அல்லாஹ்வின் அருட்கொடைக்கு வாரிசாக முடியும். அல்லாஹ்விற்காகத் தத்தமது இறைவணக்கங்களைக் களங்கமற்றதாக ஆக்கிக் கொள்ள வேண்டும். அப்போதுதான் நாம் அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு வாரிசாக முடியும். உலக எண்ணங்கள் மற்றும் தேவைகள் ஆகியவற்றிலிருந்து தங்களது மூளையைத் தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும். அப்போது தான் அல்லாஹ்வின் அருள் உங்கள் மீது இறங்கும். ஒரு நாளில் ஐந்து முறை இதற்கான முயற்சிகள் செய்யப்படும்போது தான் நாம் அல்லாஹ்விற்காக நமது மார்க்கத்தைக் களங்கமற்றதாக ஆக்கிக் கொள்ள முடியும். எனவே உங்களின் ஆன்மாவை தூய்மைப்படுத்துவதற்குரிய முயற்சியை மேற்கொள்ளுங்கள்.

அல்லாஹ் நமக்குக் கூறுகின்றான்: இந்த தூய்மை என்பது அல்லாஹ்வின் மார்க்கத்தை களங்கமற்றதாக ஆக்க வேண்டும். எவர்கள் தங்களது நேர்வழிக்கான ஏற்பாட்டைச் செய்வதற்கு முயற்சி செய்யவில்லையோ, மேலும் எவர்கள் அல்லாஹ்வின் மார்க்கத்தைக் களங்கமற்றதாக ஆக்கிக் கொள்ள முயற்சி செய்யவில்லையோ அவர்கள் வழிகேட்டின் கிடங்கில் சென்று வீழ்கின்றார்கள். இவர்கள் எத்தகையவர்கள் என்றால், அல்லாஹ்வின் அடைக்கலத்தைத் தேடுவதற்குப் பகரமாக ஷய்த்தானைத் தமது நண்பர்களாக ஆக்கிக் கொண்டார்கள். இந்த நிலையில் அவர்களுடைய அமல் அல்லாஹ்வின் திருப்திக்கேற்ப இருப்பதாகவும் அவர்கள் எண்ணிக் கொள்கின்றனர். அல்லாஹ்வின் புறமிருந்து அனுப்பப்பட்டவரை நிராகரித்தவர்களின் நிலை இதுவாகவே உள்ளது.

இன்றைய நாட்களில் நாம் தீய ஆலிம்களைப் பார்க்கின்றோம். நமது எதிரிகளின் நிலைமை இவ்வாறு தான் உள்ளன. தம்முடன் பொது மக்களையும் இவர்கள் வழிகெடுக்கின்றனர். எங்களை விட இஸ்லாத்தின்படி அமல் செய்யக் கூடியவர்கள் யாரும் இல்லை என அவர்கள் தத்தமது வட்டத்தில் நினைக்கின்றனர். அதாவது இவர்களை விட அதிகமாக வேறு எவரும் முயற்சி செய்யவில்லை என்று எண்ணுகின்றனர். தங்களது நோக்கத்தைப் பெறுவதற்காக இத்தகைய மக்கள் எந்தவொரு வழிமுறையையும் எந்த முயற்சியையும் அல்லது சதித்திட்டத்தையும் கைவிடுவதில்லை. அதன் பின்னரும் அரசாங்கங்களும் அவர்களைக் கண்டு அச்சத்தில் இருக்கின்றது.

இன்றைய நாட்களில் பாகிஸ்தானில் கராச்சியில் இந்த எதிர்ப்பின் அழுத்தம் உள்ளது. அதில் அவர்கள் பிடிவாதமாக உள்ளனர். நாம் நமது பள்ளிவாசல்களின் மினாராக்களை உடைக்க வேண்டும் என்று அரசாங்கமே நம்மிடம் கூறுகின்றது. பலமுறை அஹ்மதிகளிடம் இந்த பள்ளிவாசலின் மினாராக்களை அகற்றுங்கள் என்று கூறியுள்ளது. மேலும் அந்த பள்ளிவாசல்கள் 50,60 ஆண்டுகளாக இருந்து வந்துள்ளன. இது அவர்களுக்குப் புரிவதில்லை. முல்லாக்களின் மீதான அச்சம் எல்லையற்றதாக இருக்கிறது. ஜமாஅத் உறுப்பினர்கள் மீது அநீதியிழைப்பதில் இந்த மக்கள் முன்னேறிக் கொண்டே சென்று விட்டனர். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு எதிராக ஏசிப்பேசுதல் அதிகரித்து விடுகின்றன.

அதுபோன்ற மக்களைப் பற்றியே அல்லாஹ் கூறுகின்றான்: அவர்களுக்கு வழிகேடு விதிக்கப்பட்டுள்ளது. பெயர்தாங்கிய ஆலிம்களுக்குப் பின்னால் அவர்கள் செல்கின்றனர். அவர்களைப் பற்றி நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: இறுதி காலத்தில் பள்ளிவாசல்கள் நிறைந்து காணப்படும். இன்று நாம் அப்படிப்பட்ட காட்சிகளைக் காண்கின்றோம். ஆனால் அந்நியர்களை நல்வழிப்படுத்தும் விஷயங்களிலிருந்து முற்றிலும் விலகிஇருக்கின்றார்கள். அவர்களிலிருந்தே குழப்பம் தோன்றும். பின்னர் குழப்பம் அவர்கள் பக்கமே திரும்பி விடும். இந்த மக்கள் இஸ்லாத்தை இழிவுபடுத்தக்கூடிய மக்கள் ஆவர். இவர்கள் மோசமான படைப்பினங்களாக இருக்கின்றனர்.

(ஷஅபுல் ஈமான் லில்பைஹக்கி தொகுதி 3 பக்கம் 317,318 ஹதீஸ் எண் 1763)

எனவே இதுபோன்ற நிலையில் நமது பொறுப்பு அதிகரித்து விடுகின்றது. அது என்னவென்றால், நாம் நமது இறைவணக்கத்தைக் கலப்பற்றதாக ஆக்கிக் கொள்ள வேண்டும். மேலும் உலகத்திற்கு இஸ்லாத்தின் உண்மையான போதனைகளைக் கற்றுக் கொடுக்க வேண்டும். நமது முயற்சிகளை விடவும் அல்லாஹ் இஸ்லாத்தின் உண்மையான போதனைகளைப் பரப்புவதற்கான பாதைகளை திறக்கின்றான். இந்த தலைமையகமும் கூட அதில் ஒரு பகுதியாகும். எனவே நாம் நமது பொறுப்புகளைப் புரிய வேண்டும். இது நமது தனிப்பட்ட முயற்சியாக இருந்திருந்தால் இந்த கட்டிடம் ஒருபோதும் கட்டப்பட்டிருக்காது. இது அல்லாஹ்வினுடைய அருள் மட்டுமே ஆகும். அவன்தான் நமக்கு தலைமையகத்தினை வழங்கினான். ரமலானின் இந்த நாட்களில் ஆன்மாவின் முன்னேற்றத்திற்காக இறைவன் ஏற்பாடுகளைச் செய்துள்ளான். எனவே நாம் நமது மார்க்கத்தை முன்பை விட அதிகமாக அல்லாஹ்விற்காக களங்கமற்றதாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அல்லாஹ்விற்காக மார்க்கத்தை களங்கமற்றதாக எவ்வாறு ஆக்குவது என்பது பற்றி நமக்கு வழிகாட்டியுள்ளார்கள். இது தொடர்பாக அன்னார் ஒரு சந்தர்ப்பத்தில் இவ்வாறு கூறினார்கள்:

திருக்குர்ஆனில் اُدْعُوْهُ مُخْلِصِيْنَ لَهُ الدِّيْنَ என்று எழுதப்பட்டுள்ளது. கலப்பற்றத் தன்மையுடன் அல்லாஹ்வை நினைவு கூற வேண்டும். மேலும் அவனது கருணைகளை அதிகமாக தேடிப்பார்க்க வேண்டும். கலப்பற்ற தன்மை இருக்க வேண்டும். நன்மை இருக்க வேண்டும். அவன் ஒருவனே ரப் என்றும் அவனே உண்மையான படைப்பாளன் என்று எண்ணி அவன்முன் குனிய வேண்டும். இறைவணக்கத்தின் அடிப்படையின் சுருக்கம் இதுவாகும். அதாவது தன்னை இறைவணக்கத்தில் எவ்வாறு நிலைநிறுத்த வேண்டும் என்றால் ஒன்று இறைவனைப் பார்த்துக் கொண்டிருப்பது போன்று இருக்க வேண்டும். அல்லது இறைவன் அவர்களைப் பார்த்துக் கொண்டிருக்கின்றான் என்ற நிலை இருக்க வேண்டும்.

எல்லா வகையான கலப்படம் மற்றும் இணை வைத்தலிலிருந்து இறைவணக்கம் தூய்மையாக இருக்க வேண்டும். அவனது மகத்துவம் மற்றும் ருபூபிய்யத் பற்றிய எண்ணமே இருக்க வேண்டும். வழக்கமான துஆக்களையும் ஏனைய துஆக்களையும் இறைவனிடத்தில் அதிகமாகச் செய்ய வேண்டும். மிகவும் அதிகமாக தவ்பா, இஸ்திஃபார் செய்ய வேண்டும். நஃப்ஸ் தூய்மைப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக மீண்டும் மீண்டும் தனது பலவீனங்களை அவனிடத்தில் எடுத்து வைக்க வேண்டும். மேலும் இறைவனுடன் உண்மையான தொடர்பு ஏற்பட வேண்டும். அவனது அன்பில் மூழ்கி விட வேண்டும். (மல்ஃபூஸாத் தொகுதி 9 பக்கம் 451)

எனவே அல்லாவிற்காக மார்க்கமும் இறைவணக்கமும் களங்கமற்றதாக இருக்கின்றபோது நஃப்ஸும் கலப்பற்றதாக இருக்கும். தனது நஃப்ஸைத் தூய்மைப்படுத்தற்கான சந்தர்ப்பமும் கிடைக்கும். அல்லாஹ்வை வணங்குவதற்குரிய உரிமைகளும் வழங்கப்படும். அடியார்களுக்குரிய உரிமைகளை வழங்குவதற்கும் அல்லாஹ்வின் கட்டளைகளின்படி செயல்படுவது அவசியமாகும்.

ஒரு முறை ஒருவர் சமூக வலைதளத்தில் வந்த ஒரு வீடியோவை எனக்கு காட்டினார். அதில் இஃப்தார் நேரத்தில் மிக ஆயத்தமாக முஸ்லிம்கள் ஓரிடத்தில் இஃப்தாருக்காக ஒன்று கூடி இருக்கின்றார்கள். ஏதோவொரு விஷயத்தின் காரணமாக ஏறக்குறைய உணவு தொடர்பாக அவர்களிடையே பிரச்சனை ஏற்படுகின்றது. ஏசிப் பேசுவதை துவங்குகின்றார்கள். இதை விட அதிகமாக பின்னர் கைகலப்பும் ஏற்படுகின்றது. சண்டைகளும் ஆரம்பமாகின. ஒருவர் மற்றவரைக் குத்திக் கொண்டனர். மேலும் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். ஒருவரை ஒருவர் எட்டி உதைக்கின்றனர். பிடித்து இழுத்துத் தள்ளுகின்றனர். உணவு இங்கும் அங்கும் சிந்திக் கிடக்கின்றது. பெரியவர் சிறியவர் என்ற எந்த மதிப்பும் இல்லாமல் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். இவை அனைத்தும் நோன்பின் நிலையில் நடந்து கொண்டிருந்தது.

அவர்களின் வழக்கமான நடைமுறைக்கேற்ப தொழுகைக்காக அவர்கள் அணிகின்ற நீண்ட ஆடையுடன் இந்த அனைத்து சண்டைகளும் நடந்து கொண்டிருந்தன.அல்லாஹ் இதுபோன்ற நோன்பின் நிலையில் நீங்கள் எந்த தவறான விஷயத்தையும் பேசக் கூடாது. சண்டையிடுபவருக்குப் பதில் கூட கொடுக்க வேண்டாம். மாறாக நான் நோன்பாளி என்று கூறி விட வேண்டும். என்றே இறைவன் கூறியுள்ளான்.

நோன்புக்கு நான் கூலியாக உள்ளேன் என்று அல்லாஹ் கூறியுள்ளான். இதுபோன்ற நோயாளிக்கு இறைவன் நற்கூலியாகி விடுவானா? இவர்கள் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறக்கூடியவர்களாக இருப்பார்களா? இதுதான் நோன்பின் மூலமாக அவர்கள் பெற்றுக் கொண்டிருக்கின்ற மனத்தூய்மையா? இவ்விஷயங்களிலிருந்து தோன்றியுள்ள இமாமை ஏற்றுக்கொள்வது எவ்வளவு முக்கியமானது என்பது மேலும் தெளிவாகின்றது. மேலும் முஸ்லிம்களின் சீர்திருத்தத்திற்கு எவ்வளவு அவசியம் உள்ளது என்பதையும் இந்த சம்பவம் தெளிவுபடுத்துகின்றது. அந்த இமாம் வந்ததும் இவர்கள் அவரை ஒப்புக் கொள்வதில்லை. ஆனால் நமக்கு இந்த விஷயங்கள் நாம் நம்மை நாமே ஆய்வு செய்வதன் பக்கம் கவனமூட்டுகின்றன. நம்மை சீர்படுத்திக் கொள்வதன் பக்கமும் சிறிய சிறிய விஷயத்தின் காரணமாக நமக்கிடையே ஏதாவது பகைமையும் நிம்மதியற்ற நிலையும் இருக்குமென்றால் அதனை அகற்ற வேண்டும். மேலும் நோன்புகளுக்குரிய உரிமைகளை செலுத்தக் கூடியவர்களாக நாம் இருக்க வேண்டும் என்பதன் பக்கமும் இந்த சம்பவம் நமக்கு கவனமூட்டுகின்றது.

அல்லாஹ்விற்காக கலப்பற்றவர்களாகத் திகழ்ந்து அவனை வணங்கக் கூடியவர்களாக நாம் இருக்க வேண்டும். பின்னர் அவனது கட்டளைகளின்படி அமல் செய்யக் கூடியவர்களாக நாம் இருக்க வேண்டும்.

இதேபோன்று ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இன்று இஸ்லாத்தின் பெயரில் களங்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து ஒழுக்க சீர்கேடுகளும் நிறைந்து விட்டன. அதாவது தவறான, வீணான பேச்சுக்கள் மற்றும் தீய ஒழுக்கங்கள், தீமைகள் மிக அதிகமாகி விட்டன.

அன்னார் கூறுகின்றார்கள்: مُخْلِصِينَ لَهُ الدِّينَ என்பதில் எந்த கலப்பற்றத் தன்மையின் பக்கம் கூறப்பட்டுள்ளதோ அது விண்ணில் மறைந்து விட்டது. அதாவது அது உலகில் எங்கும் தென்படவில்லை. இறைவனுடனான உண்மை, நன்றியுணர்வு, கலப்பற்றத்தன்மை, அன்பு மற்றும் இறைவன் மீதான நிச்சய உறுதி ஆகியவையும் காணாமல் போய் விட்டன.

அன்னார் கூறுகின்றார்கள்: இப்போது புத்தம் புதிதாக இந்த ஆற்றல்களை உயிரூட்ட வேண்டும் என இறைவன் எண்ணியுள்ளான்.

(மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 352)

மேலும் அன்னார் கூறுகின்றார்கள்: இது எப்படிப்பட்ட காலம் என்றால் இதில் பகட்டு, விநோதமான சுயநலம், ஆணவம், அகந்தை மற்றும் இதர தீய பண்புகளிலும் மக்கள் முன்னேறி விட்டனர். இந்தத் தீமைகளில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டு வருகின்றது. مُخْلِصِينَ لَهُ الدِّينَ அதாவது கலப்பற்ற முறையில் அவனை அழைப்பது என்ற அழகிய பண்பு விண்ணில் மறைந்து விட்டது. மேலும் நிச்சய உறுதி போன்ற விஷயங்களும் மறைந்து விட்டன.

அதாவது அல்லாஹ்வின் மீதான நம்பிக்கை இல்லாமல் போய் விட்டது. அல்லாஹ்விடத்தில் தனது விவகாரத்தை ஒரு நம்பிக்கையாளர் ஒப்படைப்பதுண்டு. அதுபோன்ற எந்த நிலையும் இன்று உலகில் தென்படவில்லை. So Called நம்பிக்கையாளர்கள் அதாவது பெயர் தாங்கிய நம்பிக்கையாளர்களே இருக்கின்றார். சிறிய சிறிய விஷயங்களில் சண்டைகள் நடந்து கொண்டிருக்கின்றன. முற்றிலும் நல்லொழுக்கம் முற்றுப் பெற்று விட்டது. இப்போது அவர்களிடம் விதை விதைக்கப்பட வேண்டும் என்பது இறைவனின் எண்ணமாகும்.

(அல் பத்ர் தொகுதி 3 பக்கம் 10 – 8 மார்ச் 2004 ஆம் ஆண்டு பக்கம் 3)

முதலில் இந்த ஆற்றல்களுக்கு உயிரூட்ட வேண்டும் என்றும் அன்னார் கூறியிருந்தார்கள். இங்கு விதை விதைப்பது இறைவனின் எண்ணமாகும் என்று அன்னார் கூறியுள்ளார்கள்.ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாக விதை விதைக்கின்ற இந்தப் பணி நடந்துள்ளது. இந்த நல்லொழுக்கங்களுக்கு உயிரூட்ட வேண்டும் என்பதும் இறைவணக்கங்களைக் கலப்பற்றதாக ஆக்க வேண்டும் என்பதும் அல்லாஹ்விற்குரிய உரிமைகளையும், அல்லாஹ்வின் படைப்பினத்திற்குரிய உரிமையையும் வழங்கச் செய்வதற்கு இறைவன் எண்ணியுள்ளான். அல்லாஹ் இப்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாக இதனை தொடர்ந்து நடத்துவதற்கு எண்ணியுள்ளான்.

அன்னார் கூறினார்கள்: அந்த விதை விதைக்கப்பட்டதன் மூலம் தோன்றிய செடிகளாகவும், மரங்களின் கிளைகளாகவும் நாம் ஆக வேண்டும். நாம் நமது தொழுகைகளை அல்லாஹ்விற்காக கலப்பற்றதாக ஆக்கிக் கொள்ளும்போது பிறரின் பலவீனங்களைப் பார்த்து நாம் நமது பலவீனங்களை சீர்திருத்திக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும். மேலும் அல்லாஹ்வின் திருப்தி என்பது மற்ற அனைத்து தேவைகளையும் விட முதன்மையானதாக இருக்க வேண்டும்.

ஒரு சந்தர்ப்பத்தில் அன்னார் கூறினார்கள்: செயல்கள் நல்ல செயல்களாக அமைய கலப்பற்றத்தன்மை நிபந்தனையாகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 8 பக்கம் 354)

எனவே வெளிப்படையான ஒரு நன்மை செய்து அதில் கலப்பற்றத்தன்மை இல்லையென்றால் மேலும் அல்லாஹ்வின் திருப்திக்கான துடிப்பு இல்லையென்றால் அந்த நன்மை வீணானதாகும். தொழுகைகள் வீணானவையாகும். எனவே இது நமக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கையாகும். நாம் நமது இறைவணக்கங்களை களங்கமற்றதாக ஆக்கிக் கொள்ளாதவரை அந்த இறைவணக்கங்களால் எந்த நன்மையும் கிடைக்காது.

திருக்குர்ஆன் அடிப்படையில் மனிதனுடைய இயல்பான

நிலைகளுக்கும் அவனது ஒழுக்க நிலைகளுக்கும், ஆன்மீக நிலைகளுக்கும் மிக நெருங்கிய தொடர்பு உள்ளது. எந்த அளவுக்கு என்றால் மனிதன் உண்கின்ற மற்றும் பருகுகின்ற முறைகளும் கூட மனிதனின் நல்லொழுக்க மற்றும் ஆன்மீக நிலைமைகளின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. நான் கூறியிருந்ததுபோன்று இஃப்தார் சம்பவத்தை மக்கள் கூறுகின்றனர். அங்கு நோன்பு திறப்பதற்காக மக்கள் ஒன்று கூடியிருந்தனர். பிறகு அங்கு நடந்த சம்பவங்களைப் பற்றி உதாரணமாக கூறப்பட்டிருந்தது. அவர்களின் வெளிப்படையான நிலைமைகளோ அவர்களின் ஆன்மீக நிலைமைகளைப் படம் பிடித்துக் காட்டுகின்றது. அவர்களிடத்தில் ஆன்மீகம் முற்றுப் பெற்று விட்டது என்பதை இந்த விஷயங்கள் வெளிப்படுத்துகின்றன. அடுத்து இந்த விஷயங்களும் நமக்கு கவனமூட்டக்கூடியதாக இருக்க வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இந்த இயல்பு நிலைகளை மார்க்கச் சட்டத்தின் வழிகாட்டலுக்கேற்ப நாம் செயல்படுத்தினால் உதாரணமாக, உப்பளத்தில் படிந்த ஒவ்வொரு பொருளும் உப்பாகவே மாறி விடுவது போன்று அனைத்து நிலைகளும் நல்லலொழுக்க நிலைகளாக மாறி விடுகின்றன. உண்பதற்கும், பருகுவதற்கும் அல்லாஹ்வினுடைய கட்டளைகள் இருக்கின்றன. அடிப்படை நல்லொழுக்கங்கள் இருக்கின்றன. உணவை சமச்சீராக உண்ண வேண்டும். இந்த விஷயங்கள் அல்லாஹ்வின் கட்டளையைக் கருத்தில் கொண்டவாறு செய்யப்பட்டால் ஷரீஅத்தின் வழிகாட்டலுக்கேற்ப செய்யப்பட்டால் பின்னர் அதன் மூலம் உங்களின் ஒழுக்கங்களும் சரியாகி விடும். இந்த அனைத்து நிலைகளும் நல்லொழுக்க நிலைகளாக மாறி விடும். மேலும் ஆன்மீகத்தின் மீது மிகுந்த ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

இதேபோன்று திருக்குர்ஆனில் அனைத்து இறைவணக்கங்கள் மற்றும் உள்ளார்ந்த தூய்மையின் நோக்கங்களுக்கும் உருக்கம் மற்றும் பணிவின் நோக்கங்களைப் பெறுவதற்கும் உடல் சார்ந்த தூய்மையும், பௌதீக அதபுகளும் மேலும் பௌதீக அசைவுகளும் மிகவும் கருத்தில் கொள்ளப்படுகின்றது. வெளிப்படையான சுத்தமும் மிகவும் அவசியமாகும. அதபுகளும் மிகவும் அவசியமாகும். தம்மைத்தாமே சுத்தமாக வைத்துக் கொள்வதும் மிகவும் அவசியமாகும். அப்போதுதான் மனிதன் நடுநிலையை பேணக்கூடியவனாக இருக்க முடியும்.

அன்னார் கூறினார்கள்: சிந்தித்துப் பார்க்கும் போது இந்த தத்துவம் தான் மிகச் சிறந்ததாக தெரிய வரும். அதாவது பௌதீக உறுப்புகள் ஆன்மாவின் மீது வலுவான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. நாம் பார்க்கின்றோம். நமது இயல்பான அசைவுகள் அது வெளிப்படையில் பௌதீக நிலைகளாக இருக்கின்றன. ஆனால் அது நமது ஆன்மீக நிலைகளின் மீது நிச்சயமாக தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

உதாரணமாக, நமது கண்கள் அழத் தொடங்கி விட்டால் அந்த அழுகை செயற்கையான அழுகையாக இருந்தாலும் சரியே; ஆனால் உடனடியாக கண்ணீரின் அந்த தாக்கமானது உள்ளத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. உடனே உள்ளமும் சோகமாக ஆகி விடுகின்றது. அப்போது உள்ளமும் கண்களைப் பின்தொடர்ந்து துன்பத்திற்கு ஆளாகி விடுகின்றது. அதே போன்று நாம் செயற்கையாக சிரிக்கத் தொடங்கினால் உள்ளத்திலும் ஒரு மகிழ்ச்சி ஏற்படுகின்றது. ஓர் இன்பத்தை மனிதன் உணர்கின்றான்.

அன்னார் கூறினார்கள்: பௌதீக சஜ்தாவும் கூட மனிதனிடத்தில் உருக்கம் மற்றும் பணிவிற்கான பழக்கத்தை ஏற்படுத்துகின்றது. சில முறை பௌதீக சஜ்தாக்கள் செய்கின்றபோது ஒரு உருக்கம், பணிவின் நிலை தோன்றுகின்றது. இதற்கு நேர்எதிரில் நாம் பார்க்கின்றோம். நாம் கழுத்தை உயர்த்திக் கொண்டும், மார்பை நிமிர்த்திக் கொண்டும் வேகமாகவும் நடந்து சென்றால் ஒரு வகையான ஆணவமும், சுயநலனும் தோன்றி விடுகின்றது. இந்த உதாரணங்களின் மூலமாக விஷயம் முழுமையாக தெளிவடைந்து விடுகின்றது. அதாவது நிச்சயமாக பௌதீக உறுப்புகளின் தாக்கம் ஆன்மீக நிலைகளின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

(இஸ்லாமி உஸூல் கி ஃபிலாஸஃபி, ரூஹானீ கஸாயின் தொகுதி 10 பக்கம் 319,320)

அடுத்து அன்னார் இவ்வாறும் கூறினார்கள்: மனிதனின் ஆன்மீக நிலையைச் சரி செய்வதற்கு வெளிப்படையான உணவும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக உள்ளது. சமச்சீரான உணவை உண்ண வேண்டும். இறைச்சியை மட்டுமே உண்ணக் கூடாது. அல்லது காய்கறி மட்டுமே உண்பேன். வேறு எதனையும் உண்ண மாட்டேன் என்றும் கூறக் கூடாது. அல்லாஹ் மனிதனுக்காக எந்த எந்த தூய பொருட்களைப் படைத்துள்ளானோ அதை உண்பதற்கு அனுமதி உள்ளது. அது ஹலாலானதாகவும் தூய்மையானதாகவும் இருக்க வேண்டும். அதில் கூடுதலும் குறைவும் இருக்கக் கூடாது. அவ்வாறிருந்தால் மனிதனின் ஆன்மீக மற்றும் நல்லொழுக்க நிலைகளின் மீது தாக்கத்தை ஏற்படுத்திவிடுகின்றது. சமச்சீரான உணவு மனிதனுடைய ஒழுக்கத்தையும் சமச்சீராக வைக்கின்றது.

மேலும் அல்லாஹ்வை வணங்குவதன் பக்கமும் கவனமூட்டுகின்றது. ஒவ்வொரு விவகாரத்திலும் வழிகாட்டுவது இஸ்லாத்திற்குரிய அழகாகவே இருக்கின்றது. இது மக்களின் மீதும் அனைத்து உலகத்தின் மீதும் இறைவன் செய்த கருணையாகும். உடல் ஆரோக்கியத்திற்கான சட்ட திட்டங்களையும் இறைவன் நிர்ணயித்துள்ளான். எந்த அளவுக்கு என்றால் அவன் திருக்குர்ஆனில் كُلُوا وَاشْرَبُوا وَلَا تُسْرِفُوا என அல்லாஹ் கூறியுள்ளான். நிச்சயமாக உண்ணுங்கள். பருகுங்கள். ஆனால் உணவு உண்பதில் ஆகுமற்ற வழிமுறைகளில் கூடுதல் மற்றும் குறைவை வெளிப்படுத்தாதீர்கள்.

(அய்யாமுஸ் சுலஹ், ரூஹானீ கஸாயின் தொகுதி 14 பக்கம் 332)

இதன் மூலமும் சமநிலை சீர்கெட்டு விடுகிறது. அதன் தாக்கமும் ஆன்மீக நிலைகளின் மீது ஏற்படுகிறது. எனவே ஒரு உண்மையான இறைஅடியான் எவர் அல்லாஹ்விற்காக கலப்பற்றவராகத் திகழ்ந்து இறைவணக்கம் செய்கின்றாரோ அத்தகைய நபர் தனது ஆன்மீக நிலையில் மட்டும் முன்னேற்றம் காண்பதில்லை. மாறாக, அல்லாஹ்வுடனான தொடர்பிலும் அவர் முன்னேறுகிறார். இன்னும் சொல்லப்போனால் அவர் தனது பௌதீக நிலைகளையும் சரிசெய்து கொள்கின்றார். மேலும் அல்லாஹ்வின் அருட்கொடைகளைப் பயன்படுத்தவதும் கூட அவர் அல்லாஹ்வின் திருப்தியைப் பெற வேண்டும் என்பதற்காகவே செய்வார்.

உலகப் பொருட்களும், ஓய்வும், ஆடம்பரமும், உண்பதும், பருகுவதும் அவர்களின் நோக்கமாக இருப்பதில்லை. மாறாக, அவர்களுக்குக் கிடைத்த வாழ்க்கையில் இறைவனுடைய அருட்கொடைகளிலிருந்து பங்கு பெற்றவர்களாக அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காகவும் தமது வாழ்க்கையைக் கழிப்பதற்கு அவர்கள் முயற்சி செய்கினற்னர். இதுவே அவர்களின் நோக்கமாக இருக்கின்றது.

அதாவது அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக முயற்சி செய்கின்றனர். அதேபோன்று அல்லாஹ்வின்

படைப்பினங்களுக்குரிய உரிமைகளின் பக்கமும் ஒரு நம்பிக்கையாளர் கவனமுடையவராக இருக்கின்றார். இஸ்லாம் மட்டும்தான் மனிதனை அல்லாஹ்விற்குரிய உரிமைகளை வழங்குவதன் பக்கம் கவனமூட்டுவதுடன் படைப்பினங்களின் உரிமைகளை வழங்குவதன் பக்கமும் கவனமூட்டுகின்றது. எனவே நான் கூறியது போன்று இந்த தலைமையகம் உருவானதற்குப் பிறகு அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துவதற்குரிய உரிமைகளை நிறைவேற்றுவதன் ஒரு வகை என்னவென்றால் எங்கு நமது இறைவணக்கத்தின் தரத்தை உயர்த்துவது நமக்கு அவசியமாக இருக்கின்றதோ அங்கு ஒழுக்கங்களின் தரங்களையும் உயர்த்துவது அவசியமாகும்.

குறிப்பாக இந்த புதிய சூழலில் அந்நிய மக்கள் இந்தப் பகுதியில் அண்டை அயாலராக வசிக்கின்றார்கள். நம்மீது ஒரு புதிய கண்ணோட்டம் தென்படுகின்றது. நாமும் இஸ்லாத்தின் அழகிய போதனைகளைத் தத்தமது சொல்லிலும் செயலிலும் வெளிப்படுத்தவது அவசியமாகும். தமது செயலால் காட்டுவது மிக மிக அவசியமாகும். நாம் இந்தவொரு விஷயத்தை நமது கருத்தில் கொண்டவாறு நாம் நமது வாழ்க்கையை கழித்தால் அதுவே தப்லீக்கிற்கென்று ஒரு பெரும் வழிமுறையாக மாறி விடும். மேலும் அதுவே நம்மை அல்லாஹ்விற்கு நன்றி செலுத்தக் கூடியவராக நம்மை ஆக்கி அவனது அருட்களைப் பெறக் கூடியவர்களாக நம்மை திகழச் செய்து விடும்.

இங்கு இந்த விஷயத்தையும் நினைவில் கொள்வது அவசியமாகும். சிலர் தமது அண்டை அயாலர்கள் மற்றும் வெளியூரிலிருந்து வரக் கூடியவர்களிடம் மிக நல்ல முறையில் நடக்கின்றனர். ஆனால் தமது குடும்பத்தில் மனைவி அல்லது பிள்ளைகளுடன் அவர்கள் நல்ல முறையில் நடந்து கொள்வதில்லை. இது அவர்களின் தனிப்பட்ட செயல் அல்ல. ஒரு வகையில் தனிப்பட்டதாக இருக்கக்கூடும். அதாவது அல்லாஹ் அவர்களின் வரம்பு மீறுதலுக்குரிய தண்டனையை அவர்களுக்கே வழங்குவான்.

ஆனால் இந்த விஷயங்கள் ஜமாஅத்தின் ஒற்றுமை மற்றும் அமைதியின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. குடும்பத்தில் நிலவும் அமைதியற்றத் தன்மையும் பிள்ளைகளின் மீது தீய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. எதிர்காலத்தில் பிள்ளைகள் ஜமாஅத்தின் சிறந்த அங்கமாக ஆகுவதற்குப் பகரமாக ஜமாஅத்திலிருந்து மார்க்கத்திலிருந்தும் விலகிச் செல்பவர்களாக ஆகி விடுகின்றனர். நாம் நமது அடுத்த தலைமுறையைப் பாதுகாப்பது என்பது இஸ்லாத்தைப் பரப்புவதற்கும் தமது மார்க்கத்தை அல்லாஹ்விற்காக களங்கமற்றதாக ஆக்கிக் கொள்வதும் மிக அவசியமாகும்.

இதுபோன்ற செயல்கள் நடைபெற்றால் நமது அடுத்த தலைமுறை சீர்கெட்டு விடும். எனவே நாம் அதற்காகவும் முயற்சி செய்து கொண்டிருக்க வேண்டும். இந்த வகையில் இது ஒரு ஜமாஅத் விவகாரமும் ஆகும். ஏனென்றால் எனது தந்தை வெளிப்படையில் மிகவும் மார்க்கப் பற்றுடையவராக இருக்கின்றார். மேலும் ஜமாஅத்தில் மிகவும் நல்லவராக கருதப்படுகின்றார். ஆனால் குடும்பத்தில் அவரது நடவடிக்கை முற்றிலும் வேறொன்றாக இருக்கின்றது என்பதைக் பிள்ளைகள் பார்க்கின்றனர்.

இந்த நடவடிக்கை, அடுத்து எதிர்கால சந்ததிகளை நாசமாக்கி விடுகின்றது. பின்னர் குடும்பத்தில் சண்டைகளும், மனைவியின் குடும்பத்தினருடனும் பகைமையும், கணவரின் குடும்பத்தினருடன் பகைமையும் அதிகரிக்கத் தொடங்கி விடுகின்றன. அந்நிலையில் சமூக அமைதியும் அழிந்து விடுகின்றது.

எனவே அப்படிப்பட்ட குடும்பங்களில் இதுபோன்ற விஷயங்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. அத்தகைய மக்கள் தமது குடும்பத்தின் அமைதியை மற்றும் நிம்மதியை நிலைநாட்ட முயற்சி செய்யட்டும். மாறாக, நாங்கள் இவ்வாறு செய்வோம் என்று உறுதி எடுக்க வேண்டும். அல்லாஹ் நம்மை ஜமாஅத்துடன் இணைத்து நம்மீது அருளும், கருணையும் செய்துள்ளான். அதற்கு நன்றி செலுத்தும் விதமாக நாம் நமது நிலைகளை அல்லாஹ்விற்காக கலப்பற்றதாக ஆக்கிக் கொண்டவாறு அவனது கட்டளைகளுக்கேற்ப நடப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

அதே போன்று எந்த எந்த பெண்களிடம் சின்னச்சின்ன காரணங்களில் கோபத்தின் அம்சம் மேலோங்கி இருக்கின்றதோ அவர்களும் தமது பிள்ளைகளின் தர்பிய்யத்திற்காக தமது நிலைகளில் மாற்றங்கள் செய்வது அவசியமாகும். இந்த ரமலானை இந்த அடிப்படையிலும் தனித்தன்மைவாய்ந்ததாக ஆக்கிக் கொள்ளுங்கள். நாம் நமது குடும்பத்தையும் இந்த மாதத்தின் பரக்கத்துகளால் நிரப்ப வேண்டும். ரமலானில் பள்ளிகளின் பக்கம் கவனம் ஏற்பட்டுள்ளது. பள்ளிக்கு வருவதன் அசல் அழகு இறையச்சம் ஆகும். அதில் நாம் முன்னேற வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியது போன்று இறையச்சத்தின் வழி நடந்து பகட்டு, தற்பெருமை, ஆணவம் இவற்றிலிருந்து தப்பிக்க வேண்டும். எந்த அளவுக்கு அதிகமாக அல்லாஹ்வின் அருட்கள் நம்மீது இறங்கிக் கொண்டிருக்கிறதோ அதை விட அதிகமாக நாம் இந்த விஷயங்களை சிந்திக்க வேண்டும். நாம் ஒவ்வொரு விவகாரத்திலும் அல்லாஹ்வின் திருப்திக்குரிய வழிகளைத் தேடுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

மேலும் எந்தத் தொழுகையாளியின் மீது இறைவன் கோபமடைந்து அவர்களின் தொழுகைகளை அவர்களின் அழிவிற்குக் காரணியாக ஆக்கி விட்டானோ அதுபோன்ற தொழுகையாளிகளாக நாம் ஆகிவிடக்கூடாது. மாறாக, இறைவனின் திருப்தியில் நம்மை சேர்க்கக்கூடியவனாக நாம் இருக்க வேண்டும். மேலும் அவனது அருட்களுக்கு வாரிசாக நாம் ஆகிவிட வேண்டும். அல்லாஹ் வழங்கியுள்ள இந்த தலைமையகத்தின் அசல் நோக்கம் என்பது மார்க்கத்தின் தேவைகளுக்காக அதனை பயன்படுத்திக் கொள்வது என்பதாகும்.

ஆனால் உலக ரீதியிலும் இது அல்லாஹ்வின் மாபெரும் ஒரு அருளாகும். அவன் இந்த அருட்கொடைகளை நமக்கு வழங்கியுள்ளான். நான் ஏற்கனவே கூறியது போன்று நாம் நமது முயற்சிகளால் இதனைப் பெற்றுக் கொள்ள முடியாது. ஒருவகையில் இந்த தலைமையகத்தின் மூலம் நமக்கு அல்லாஹ் மார்க்க மற்றும் உலகம் ஆகிய இரண்டு அருட்கொடைகளையும் வழங்கியுள்ளான். எனவே எல்லா அம்சங்களையும் கண்முன் நிறுத்தியவாறு அல்லாஹ்விற்கு நன்றி செலுத்த வேண்டும். ஓர் உலகவாதி இந்த அனைத்து திட்டங்களையும் பார்க்கின்றபோது அவரால் தாக்கத்திற்குள்ளாகாமல் இருக்கவே முடியாது.

இந்த திட்டம் அல்லாஹ்வின் அருளினால் மட்டுமே சாத்தியமானது என்பதும், மேலும் நாம் சிறிய ஜமாஅத்தாக இருக்கின்றோம். மேலும் நமது வசதி வாய்ப்புகள் குறைவாக இருக்கின்றன என்பதும் அதே போன்று ஜமாஅத் உறுப்பினர்கள் தமது தியாகத்தினால் இவை அனைத்தையும் செய்கின்றனர் என்பதும் தெரிய வரும்போது அந்த அந்நியர் மிகவும் ஆச்சரியத்திற்குள்ளாகி விடுவார். அதுமட்டுமல்ல, இன்றும் உயிருள்ள இறைவன் இருக்கின்றான். அவன் அவர்களுக்கு உதவி செய்கின்றான் என்ற தாக்கம் அவர் மீது ஏற்படும். இறைவன் யாருக்கு வழங்க விரும்புகின்றானோ அவருக்கு வழங்குகின்றான் என்பதும் அவருக்கு தெரிய வரும்.

எனவே வெளிப்படையில் ஒரு உலகவாதி இதன் மூலம் நமது போதனைகளின் தாக்கத்திற்கு உள்ளாகின்றார். அந்த அந்நியர் இந்த செயல்களின் மூலம் நமது தப்லீக்கின் கீழ் வந்து விடுகின்றார். இறை இருப்பை காட்டிக் கொடுப்பதற்கு நமது சொல்லும் செயலும் மற்றவர் மீது தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருப்பது அவசியமாகும். எனவே எந்த கண்ணோட்டத்தில் நாம் எடுத்துப் பார்த்தாலும் நமது கழுத்து எப்போதும் அல்லாஹ்வின் முன் குனிந்த நிலையில் இருக்க வேண்டும். குனிந்தே இருக்கவும் வேண்டும். அவன் தனது அருளால் நமக்கு இந்த ஊரில் வசிப்பதற்கு நற்பாக்கியம் வழங்கியுள்ளான். ஒரு வகையில் இங்கு மக்கள் தொகை ஒரு முஹல்லாவாசிகளுக்குரிய அளவில் தான் உள்ளது. இன்னும் சொல்வதென்றால், அதைவிட சிறியதாகும். ஆனால் நான் கூறியதுபோன்று தலைமையகம் என்ற அடிப்படையில் இது முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.

உலகத்தின் இந்தப் பகுதியில் அல்லாஹ் தலைமையகம் கட்டுவதற்கான நற்பாக்கியத்தை வழங்கியுள்ளான். இந்த பகுதி ஏகத்துவத்திலிருந்து காலியாக உள்ளது. இன்னும் சொல்வதென்றால் இணை வைப்பால் நிறைந்துள்ளது. இங்கிருந்து ஒரு புதிய உணர்வுடன், ஏகத்துவத்தைப் பரப்புவதற்கான பணிகளை செய்யுங்கள். மேலும் நபி (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரின் உரிமையை நிறைவேற்றுங்கள்.

அடுத்து அந்த நாட்களும் வரும். அதாவது பெரும் பெரும் ஊர்களும் நகரங்களும் அல்லாஹ்வின் ஏகத்துவத்தை அறிவிக்கக்கூடியதாக இருக்கும். இன்று எந்த மக்கள் நபி (ஸல்) அவர்களுக்கு எதிராக தமது வாயால் பேசுகின்றார்களோ, உளறுகின்றார்களோ அவர்கள் அதற்குப் பகரமாக நபி (ஸல்) அவர்களின் கொடியின் கீழ் வந்து நின்று பெருமிதம் கொள்ளக் கூடியவர்களாக இருப்பார்கள். மேலும் அன்னார் மீது ஸலவாத் ஓதக் கூடியவர்களாக இருப்பார்கள்.

எனவே இந்த கடமை இஸ்லாமாபாத்தில் வசிப்பவர்கள் மீது மட்டும் கடமையல்ல. மாறாக, இந்த நாட்டில் வசிக்கக்கூடிய ஒவ்வொரு அஹ்மதியின் மீதும், உலகில் வசிக்கக்கூடிய ஒவ்வொரு அஹ்மதியின் மீதும் கடமையாகும். அதாவது நாம் எவ்வாறு அல்லாஹ்வின் ஏகத்துவத்தின் கொடியை உலகில் பட்டொளி வீசி பறக்கச் செய்வது? அதற்கு என்ன வழிகள் உள்ளன? என்பதைத் தேட வேண்டும். மேலும் உலகை நபி (ஸல்) அவர்களின் கொடியின் கீழ் எவ்வாறு கொண்டு வருவது? என்பதற்குரிய வழிமுறையையும் தேட வேண்டும். மேலும் எவ்வாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகையின் நோக்கத்தை முழுமை செய்வது? எவ்வாறு காலத்தின் கலீஃபாவின் திட்டங்களை முழுமை செய்வது என்பதைப் பற்றியும், மேலும் அவரது கரத்தை எவ்வாறு வலுப்படுத்துவது? என்றும் சிந்திக்க வேண்டும்.

துஆக்களின் மூலமாகவும் அமல்களின் மூலமாகவும் எவ்வாறு காலத்தின் கலீஃபாவிற்கு உதவி செய்வது? என்பதையும் சிந்திக்க வேண்டும். அல்லாஹ் நமக்கு ரமலானின் மாதத்தில் இந்த பள்ளிவாசலைத் திறப்பதற்கான நற்பாக்கியத்தை வழங்கியுள்ளான். முந்தைய கலீஃபாக்களின் காலத்தைப் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் எனது காலத்தில் ரமலானின் மாதத்தில் பள்ளிவாசல் திறப்பிற்கான இது முதலாவது சந்தர்ப்பமாகும். எனவே அளுக்குரிய மற்றும் துஆக்கள் ஒப்புக் கொள்ளக்கூடிய இந்த மாதத்திலிருந்து பயன்பெற்றவர்களாக ஜமாஅத்தின் முன்னேற்றம் மற்றும் உலகத்தின் இந்தப் பகுதியில் தலைமையகம் கட்டியதன் நோக்கம் நிறைவேறுவதற்காகவும் துஆ செய்யுங்கள். மிக அதிகமாக துஆ செய்யுங்கள். இந்த தலைமையக கட்டிடங்களிலும் பரப்பளவு அதிகரித்துக் கொண்டு சென்று விட வேண்டும். இதன் சுற்று வட்டாரத்திலும் அஹ்மதிகளின் குடியேற்றம் பரவிக் கொண்டே செல்லட்டும். இஸ்லாத்தின் மடியில் மக்கள் வருகின்ற காட்சியை நாம் பார்க்க வேண்டும். மேலும் எதிரிகளின் அனைத்து திட்டங்களும் தூள் தூளாக்கப்படுவதையும் நாம் பார்க்க வேண்டும். ரப்வா செல்வதற்குரிய வழிப்பாதையும் திறக்கட்டும். காதியான் மஸீஹினுடைய தங்குமிடமாக இருந்தது. அங்கு திரும்புவதற்கான வழிகளும் திறக்கட்டும். மக்கா மதீனா செல்வதற்கும் வழிகள் திறக்கட்டும். ஏனென்றால் அது நமது எஜமானர் ஹஸ்ரத் முஹம்மது முஃஸ்தபா (ஸல்) அவர்களின் நகரமாகும். மேலும் இஸ்லாத்தின் நிரந்தர தலைமையகமாகும். உண்மையான இஸ்லாத்தின் தூதுச் செய்தி அவர்களுக்கும் சென்றடையட்டும். மேலும் அவர்களும் ஒப்புக் கொள்பவர்களாக இருக்க வேண்டும். மேலும் நபி (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பை உண்மைப்படுத்தக் கூடியவர்களாக அவர்கள் இருக்க வேண்டும்.

அறிவீனத்தின் காரணமாக பகைமை கொண்டிருக்கின்றவர்களின் கண்களையும் அல்லாஹ் திறப்பானாக. மேலும் தீங்கிழைக்க வேண்டும் என்பதற்காகவும், தமது நோக்கத்திற்காக பொது மக்களின் உள்ளங்களில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றும் அன்னாரது ஜமாஅத்திற்கு எதிராக பகைமையை நிரப்பி வருகின்றனர். அவர்களைப் பிடிப்பதற்கும் உரிய ஏற்பாட்டை அல்லாஹ் செய்வானாக. மேலும் முஸ்லிம்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கரங்களில் ஒன்றுசேர்ந்து ஒரே சமுதாயமாக மாறி இஸ்லாத்தின் உண்மையான போதனைகளின் செயல் வடிவமாக மாறி விட வேண்டும். விரைவிலும் விரைவாக முஸ்லிம் அல்லாத உலகம் இஸ்லாத்தின் கொடியின் கீழ் வந்து விடட்டுமாக.

இந்த பள்ளிவாசல் மற்றும் இந்த அனைத்து கட்டுமானத் திட்டங்களைப் பற்றியும் சிறிது நான் கூறுகின்றேன். அல்லாஹ்வின் அருளால் இந்த பள்ளிவாசலில் சுமார் 500 தொழுகையாளிகள் தொழ முடியும். அதேபோன்று ஒரு ஹால் உள்ளது. அதில் 1200 பேரும் அத்துடன் ஒரு சிறிய இடத்தில் 110 பேரும் தொழ முடியும். ஹாலுக்கு முன்பாக திறந்த வெளி இடம் ஒன்றும் உள்ளது. அங்கும் 300 பேர் தொழ முடியும். எனவே இந்த அடிப்படையில் சுமார் 2000 பேருக்கு அதிகமானவர்கள் தொழ முடியும். அதேபோன்று நான் வீடுகள் கட்டப்பட்டிருப்பதாகவும் கூறியிருந்தேன். அலுவலகங்கள் கட்டப்பட்டிருந்ததாகவும் கூறியிருந்தேன். M.T.A விற்குரிய அலுவலகமும் இங்கு வந்து விடும் என நம்புகிறேன். Studio வும் கூட இங்கு கட்டப்பட்டு விடும். பிறகு இங்கு அனைத்து வசதிகளும் குளியல் அறைகள் போன்றவையும் உள்ளன. மேலும் சூரிய சக்திக்கான தகடுகள் வைக்கப்பட்டுள்ளன. அது மட்டுமல்லாமல் தற்காலத்தின் அனைத்து வசதி வாய்ப்புகளையும் ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்யப்பட்டுள்ளது.

இந்த திட்டம் எப்படிப்பட்டதென்றால் இதுவொரு பெரிய திட்டமாக இருந்தும் கூட இதற்கென தனிப்பட்ட பொருளாதார அறிவிப்புகள் எதுவும் செய்யப்படவில்லை. நான் அறிந்தவரை எந்த தனிப்பட்ட பொருளாதார அறிவிப்பும் செய்யப்படாமல் முழுமையடைந்த முதலாவது திட்டம் இதுவேயாகும். மஸ்ஜிதிலுள்ள டிசைன்கள் சிலருக்கு பிடித்திருக்கின்றது. சிலருக்கு பிடிக்கவில்லை. ஆனால் வல்லுனர்களின் பார்வை என்னவென்றால், இந்த டிசைனிங் அமைப்பின் மூலமாக மின்சாரமும், எனர்ஜியும் சேமிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் மற்ற ஏனைய கட்டுமானங்களும் வல்லுனர்களின் பார்வையில் மற்ற கட்டிடங்களை விட குறைந்த செலவினங்களை உள்ளடக்கியதாகும். எவ்வாறிருப்பினும் பள்ளியில் டிசைனகள் செய்யப்பட்டுள்ளன. அவ்வாறு செய்ததில் எந்தப் பிரச்சனையும்

இல்லை. ஏனென்றால் அதில் அல்லாஹ்வின் பெயர்களும், அல்லாஹ்வின் பண்புகளும் மட்டுமே எழுதப்பட்டுள்ளன. அந்தப் பணியில் மாநாட்டின் நாட்களில் குர்ஆன் புராஜக்ட்டுகளை செய்யக்கூடிய ரிஸ்வான் பேக் சாஹிப் அவர்கள் மிகவும் உதவி செய்துள்ளார்கள். அவர் தான் எழுதியுள்ளார். அல்லாஹ் அவருக்கு நற்கூலியை வழங்குவானாக. அத்துடன் ரிவியூ ஆஃப் ரிலிஜியனின் ஆசிரியர் ஆமிர் சஃபீர் சாஹிப் அவர்களும் பெரும் உதவி செய்துள்ளார்கள்.

அடுத்து கனடாவிலிருந்து இந்த வருடம் வெளிவந்துள்ள பாஸில் பட் மற்றும் மூஸா சிதார் மற்றும் முஸவ்விருத்தீன் ஆகியோர் இந்த பணிகளில் மிக முக்கிய பங்கு ஆற்றியுள்ளார்கள். மிகவும் கடினமாக உழைத்துள்ளார்கள். யாரெல்லாம் இதில் பணியாற்றினார்களோ அவர்கள் அனைவருக்கும் அல்லாஹ் நற்கூலியை வழங்குவானாக. அதே போன்று ஆடியோ மற்றும் வீடியோ பணிகளில் யூ.கேவின் டீம் மற்றும் நமது ஆ.வ.ஹ டீமும் கடினமாக பணி செய்துள்ளார்கள். அல்லாஹ் அவர்களுக்கும் நற்கூலி வழங்குவானாக.

கட்டுமான திட்டங்களுக்காக ஒரு தலைமையக கமிட்டி நியமிக்கப்பட்டது. அது அவ்வப்போது அதை கண்காணித்து வந்தது. நிரந்தரமாக கண்காணிப்பதற்காக அதில் இரண்டுநபர்கள் சேர்க்கப்பட்டனர். அதில் ஒருவர் வக்ஃபே ஆர்ஸியின் மூலமாக பங்கு பெற்ற இத்ரீஸ் சாஹிப் ஆவார். மற்றொருவர் நிரந்தரமான வக்ஃப் நவ் திட்டத்தின்கீழ் இருக்கக்கூடிய இளைஞர் அவர் இஞ்ஜினியர் ஆவார். தமது வாழ்க்கையை அர்ப்பணித்த ஃபாத்திஹ் சாஹிப் அவர்களும் நிரந்தரமான மேற்பார்வையை செய்து வந்தார்கள். சில குறைகள் இருக்கின்றன. ஆனால் எவ்வாறிருப்பினும் பொதுவாக மேற்பார்வை செய்யப்பட்டது. இப்போது வரை பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அல்லாஹ் அவர்களுக்கு நற்கூலியை வழங்குவானாக. தனிப்பட்ட ஆர்வத்துடன் தனது அனுபவத்துடன் பல பணிகளை சவுத்ரி ஜஹீர் சாஹிப் அவர்கள் சரி செய்துள்ளார்கள்.

நான் கூறியது போன்று இந்த திட்டத்திற்காக எந்த பொருளாதார அறிவிப்பும் செய்யப்படவில்லை. ஆனால் ஒரு பெரும் திட்டமாக இருந்தது. அத்துடன் உலகநாடுகளின் மற்ற இடங்களிலும் பெரிய திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. குறிப்பாக காதியானிலும் மாலி நாட்டிலும் தன்ஸானிய்யா போன்ற நாடுகளிலும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வந்தன. சில முறை இந்த திட்டங்களைத் தற்காலிகமாக நிறுத்த வேண்டியது வந்து விடுமோ என்று நான் கவலைப்பட்டதுண்டு. ஆனால் அல்லாஹ் தனது அருளை செய்திருந்தான். அனைத்து திட்டங்களும் நிறைவடைந்து கொண்டே சென்று விட்டன.

தன்ஸானியாவிலும் ஒரு மல்டிஸ்டோரி பில்டிங் கட்டப்பட்டுள்ளது. அதில் தான் அனைத்து அலுவலகங்களும் மற்ற விஷயங்களும் உள்ளன. புதிதாக கட்டப்பட்ட பள்ளிவாசலும் உள்ளது. ஒரு பெரிய காம்ப்ளக்ஸ் உள்ளது. மாலி நாட்டிலும் ஒரு பெரிய பள்ளிவாசல் கட்டப்பட்டுள்ளது. ஏனைய கட்டிடங்களும் கட்டப்பட்டுள்ளன. ஒரு பெரிய நல்ல முழுமையான காம்ப்ளக்ஸும் உள்ளது. எவர் பார்த்தாலும் அதனை மிகவும் பாராட்டுகின்றார். மாலியில் மக்கள் இவ்வாறு பேசிக் கொண்டிருக்கின்றனர். இவ்வளவு பெரிய பள்ளிவாசலும், ஏனைய கட்டடங்களும் கட்டப்பட்டிருக்கின்றன. யாரோ ஒரு பெரிய பணக்கார ஜமாஅத்தான் கட்டியிருக்கின்றது என அவர்கள் பேசிக் கொள்கின்றனர். உலகியல் ரீதியில் நாம் செல்வந்தர் அல்ல. நமது அசல் பணம் என்பது அல்லாஹ் நம்மை செல்வந்தராக ஆக்கி இருக்கின்றான். இது அல்லாஹ்வின் காரணமாகவே ஆகும். மேலும் அல்லாஹ்வின் அருளின் காரணமாகவே ஆகும்.

எனவே எப்போதும் நாம் அல்லாஹ்வின் அருளை எதுவரை வேண்டிக் கொண்டிருப்போமோ அல்லாஹ் தனது அருளை செய்து கொண்டே செல்வான். அவனது உரிமைகளை செலுத்திக் கொண்டிருக்கின்ற வரை அல்லாஹ் நம்மீது அருள் செய்து கொண்டே இருப்பான். அல்லாஹ் அதற்குரிய நற்பாக்கியத்தை வழங்குவானாக.

கடந்த நாட்களில் மாலி நாட்டிற்கு அமெரிக்காவிலிருந்து மருத்துவர் ஒருவர் வக்ஃபே ஆர்ஸி திட்டத்தின் கீழ் சென்றிருந்தார். அவர் கூறுகின்றார்: நான் ஏர்போர்ட்டிலிருந்து சென்று கொண்டிருந்தபோது தொலைவில் மிகவும் அழகிய பள்ளிவாசல் ஒன்றைப் பார்த்தேன். மேலும் ஒரு பெரிய கட்டிடத்தையும் பார்த்தேன். அப்போது நான் எனது ஓட்டுனரிடம் இது யாருடைய பள்ளிவாசல். மிக அழகாக கட்டப்பட்டுள்ளதே என்று கேட்டேன். அதற்கு அவர், இது அஹ்மதிகளின் பள்ளிவாசலாகும். அங்கு தானே நீங்கள் செல்கின்றீர்கள் என்று கூறினார்.

எனவே பார்க்கக் கூடிய ஒவ்வொருவரும் அதனை பாராட்டுகின்றனர். அதுவொரு மாபெரும் திட்டமாக இருந்தது. அல்லாஹ்வின் அருளால் அது முழுமையடைந்தது. இங்கிருந்து பிளானிங்கை ஆட்கிரெக்ட் இஜ்ஜினியர் அஸோஸியேஷன் செய்து அனுப்பியது. அல்லாஹ் அவர்களுக்கும் நற்கூலியை வழங்குவானாக. அவர்கள் அந்தப் பணியை செய்திருக்கின்றார்கள். எவ்வாறிருப்பினும் அல்லாஹ் அருள் செய்து கொண்டிருப்பானாக. நடந்து கொண்டிருக்கின்ற ஏனைய திட்டங்களிலும் எதிர்காலத்தில் இறைவன் முழுமை பெறச் செய்வானாக.

அல்லாஹ் மேலும் திட்டங்களை முழுமை செய்வதற்குரிய நற்பாக்கியத்தை வழங்குவானாக. பொதுவாக அல்லாஹ் ஜமாஅத்திற்குப் பொருள் தியாகம் செய்வதற்கான நற்பாக்கியத்தை வழங்கியுள்ளான். அவர்களுடைய இந்த தியாகத்தின் மூலமாக இந்த திட்டம் தற்போது முழுமையடைந்துள்ளது. இன்னும் சில திட்டங்கள் முழுமையடைய உள்ளன. எதிர்காலத்தில் முழுமையடைந்து விடும். இன்ஷா அல்லாஹ்

அல்லாஹ் ஜமாஅத் உறுப்பினர்கள் அனைவரின் பொருளாதார தகுதியை அதிகரித்துக் கொண்டே செல்வானாக. மேலும் அவர்களது செல்வத்திலும், வாழ்நாளிலும் பரக்கத்தை வழங்குவானாக. எந்த விதமான குறிப்பான பொருளாதார அறிவிப்பின்றி இந்த திட்டம் நடந்தது என்று என்னால் கூற முடியும். ஏனென்றால் பொதுவாக அனைத்து ஜமாஅத்துகளின் பட்ஜெட்டிலிருந்து அது செலவு செய்யப்பட்டுள்ளது. எனவே உலகிலுள்ள ஜமாஅத்துகளும் இதில் பங்கு பெற்றுள்ளன. எவர் அதிகம் கொடுத்தார்; எவர் குறைவாகக் கொடுத்தார் என்ற வேறுபாடில்லை. அல்லாஹ் அனைவருக்கும் நற்கூலி வழங்குவானாக. அவர்களது செல்வங்களிலும், வாழ்நாளிலும் பரக்கத்தை வழங்கிக் கொண்டே செல்வானாக.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் [அலை] அவர்கள் கூறுகின்றார்கள்:

குழப்பங்கள் நிறைந்த இக்காலத்தில் திருக்குர்ஆனின் மேன்மைகளையும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவங்களையும் வெளிப்படுத்துவதற்காகவும்.... இறைவன் என்னை இந்த 14–ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் தன் புறமிருந்து நியமித்து உறுதிமிக்க மார்க்கமான இஸ்லாத்தைப் புதுப்பிப்பதற்காகவும், ஆதரவளிப்பதற்காகவும் அனுப்பியுள்ளான்.

(பரகாத்துத்துஆ, ரூஹானி கஸாயின் தொகுதி 6 பக்கம் 34)

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா கிலாஃபத் மூலமாகத்தான் உலகம் ஒரே சமுதாயமாக ஆகுகின்ற காட்சியை காண இருக்கின்றது. அஹ்மதிய்யா கிலாஃபத் இன்றி அது சாத்தியமல்ல**

**எதுவரை அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் தொடர்பும் அன்பும் நிலைபெற்றிருக்குமோ அதுவரை வரை அச்சத்தின் நிலையை அமைதியில் அல்லாஹ் மாற்றிக் கொண்டிருப்பான். மேலும் அல்லாஹ் மக்களின் நிம்மதிக்கான ஏற்பாட்டைச் செய்து வருவான். இன்ஷா அல்லாஹ்**

**கிலாஃபத்தின் கூற்றின்படி அமல் செய்வது உங்களுக்கு அவசியமாகும். இது அல்லாஹ்வின் கட்டளைகளில் ஒரு கட்டளையாகும்**

**சமுதாய மற்றும் ஆன்மீக வாழ்க்கையை தொடரச் செய்வதற்கு நம்பிக்கையாளர்களுக்கு மிகவும் முக்கியமான விஷயமாகும். அவர்கள் தமது கட்டுப்படுதலின் தரத்தை உயர்த்த வேண்டும்**

**பைஅத்திற்குப் பிறகு தமது சிந்தனைகளை சரியான திசையில் வைப்பதும் முழுமையான கட்டுப்படுதலுக்குரிய முன்னுதாரணங்களை வெளிப்படுத்துவதும் மிகவும் அவசியமாகும்**

**பொதுவாக கட்டுப்படுதல் என்பது, அல்லாஹ்விற்குரிய உரிமைகளை வழங்குவதும், அவனது இறைவணக்கத்தை அழகுபடுத்தி நிறைவேற்றுவதுமே ஆகும்**

**உங்களது ஒழுக்கங்களை உயர்ந்ததாக ஆக்கிக் கொள்ளுங்கள். அஹ்மதி மற்றும் அஹ்மதி அல்லாதவருக்கிடையில் வித்தியாசம் தெளிவாகத் தென்படும் வகையில் உங்களது ஒழுக்கத்தை உயர்ந்ததாக ஆக்கிக் கொள்ளுங்கள்**

**உலக ஆசைகள் மற்றும் அதனைப் பின்தொடர்ந்து மார்க்கத்தை இரண்டாம் நிலையாக ஆக்கிக் கொள்கின்ற ஷிர்க்கான நிலை உள்ளது. அதிலிருந்தும் தப்பித்துக் கொள்ள வேண்டும்**

**அல்லாஹ்வின் அருட்களை ஈர்ப்பதற்காக நாம் நம்மை நாமே ஆய்வு செய்வது அவசியமாகும். நம்மிடத்தில் எந்த அளவுக்கு கட்டுப்படுதலுக்குரிய தரம் உள்ளது என்றும் மேலும் நாம் எந்த அளவுக்கு அல்லாஹ்வின் கட்டளைகளின்படி அமல் செய்கின்றோம் என்றும் மேலும் நாம் நமது இறைவணக்கங்களின் தரத்தை எந்த அளவு அழகுபடுத்திக் கொண்டிருக்கின்றோம் என்றும் நம்மை நாமே நாம் ஆய்வு செய்ய வேண்டும்**

**ஒவ்வொருவருக்கும் வரலாற்றைப் பற்றி சிறிதளவாவது தெரிந்திருக்க வேண்டும்**

**கிலாஃபத்துடன் தொடர்புடையவர்களாக இருந்தால் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கட்டளையின்படி அமல் செய்து வருவீர்கள். உங்களது தொழுகைகளையும் பாதுகாத்து வருவீர்கள். உள்ளத்தையும் செல்வத்தையும் தூய்மைப்படுத்தி வருவீர்கள். கட்டுபடுதலில் உயர் தரத்தை நிலைநாட்டிக் கொண்டிருப்பீர்கள். இன்ஷா அல்லாஹ். அதன் மூலம் அல்லாஹ்வின் அருட்களுக்கு வாரிசாகி விருவீர்கள். இன்ஷா அல்லாஹ்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 24 மே 2019** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1398 -ஆம் ஆண்டு **ஹிஜ்ரத்** மாதம் **24 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اِنَّمَا كَانَ قَوْلَ الْمُؤْمِنِيْنَ اِذَا دُعُوْٓا اِلَى اللّٰهِ وَرَسُوْلِهٖ لِيَحْكُمَ بَيْنَهُمْ اَنْ يَّقُوْلُوْا سَمِعْنَا وَاَطَعْنَا ؕ وَاُولٰٓئِكَ هُمُ الْمُفْلِحُوْنَ○ وَمَنْ يُّطِعِ اللّٰهَ وَرَسُوْلَهٗ وَيَخْشَ اللّٰهَ وَيَتَّقْهِ فَاُولٰٓئِكَ هُمُ الْفَآئِزُوْنَ○ وَاَقْسَمُوْا بِاللّٰهِ جَهْدَ اَيْمَانِهِمْ لَئِنْ اَمَرْتَهُمْ لَيَخْرُجُنَّ ؕ قُلْ لَّا تُقْسِمُوْا ۚ طَاعَةٌ مَّعْرُوْفَةٌ ؕ اِنَّ اللّٰهَ خَبِيْرٌۢ بِمَا تَعْمَلُوْنَ○ قُلْ اَطِيْعُوا اللّٰهَ وَاَطِيْعُوا الرَّسُوْلَ ۚ فَاِنْ تَوَلَّوْا فَاِنَّمَا عَلَيْهِ مَا حُمِّلَ وَعَلَيْكُمْ مَّا حُمِّلْتُمْ ؕ وَاِنْ تُطِيْعُوْهُ تَهْتَدُوْا ؕ وَمَا عَلَى الرَّسُوْلِ اِلَّا الْبَلٰغُ الْمُبِيْنُ○ وَعَدَ اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا مِنْكُمْ وَعَمِلُوا الصّٰلِحٰتِ لَيَسْتَخْلِفَنَّهُمْ فِى الْاَرْضِ كَمَا اسْتَخْلَفَ الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ ۖ وَلَيُمَكِّنَنَّ لَهُمْ دِيْنَهُمُ الَّذِى ارْتَضٰى لَهُمْ وَلَيُبَدِّلَنَّهُمْ مِّنْۢ بَعْدِ خَوْفِهِمْ اَمْنًا ؕ يَعْبُدُوْنَنِىْ لَا يُشْرِكُوْنَ بِىْ شَيْئًا ؕ وَمَنْ كَفَرَ بَعْدَ ذٰلِكَ فَاُولٰٓئِكَ هُمُ الْفٰسِقُوْنَ○ وَاَقِيْمُوا الصَّلٰوةَ وَاٰتُوا الزَّكٰوةَ وَاَطِيْعُوا الرَّسُوْلَ لَعَلَّكُمْ تُرْحَمُوْنَ○ لَا تَحْسَبَنَّ الَّذِيْنَ كَفَرُوْا مُعْجِزِيْنَ فِى الْاَرْضِ ۚ وَمَاْوٰىهُمُ النَّارُ ؕ وَلَبِئْسَ الْمَصِيْرُ○

நான் அதிகாரம் அந் நூரின் வசனங்களை ஓதினேன். ஆயத்தே இஸ்திஹ்லாஃப் அதாவது நம்பிக்கையாளர்களிடத்தில் கிலாஃபத் தொடரும் என்று அல்லாஹ் வாக்குதிறுதி வழங்கிய வசனத்தின் முந்தைய வசனங்களையும் நான் ஓதினேன். அதற்குப் பிந்தைய வசனங்களிலும், மேலும் ஒட்டுமொத்த வசனங்களிலும் அல்லாஹ் மற்றும் அவனது தூதருக்கு கட்டுப்படுதல் தொடர்பாகவும் அவனது கட்டளைகளின்படி செயல்படுவதன் பக்கம் கவனமூட்டப்பட்டுள்ளது. இவ்விஷயங்கள் நடைபெறும் என்றால் கிலாஃபத்தின் அருட்கொடை தொடர்பான வாக்குறுதியை அல்லாஹ் முழுமை செய்வான். அல்லாஹ் அச்சத்தின் நிலையை அமைதியில் மாற்றுவான். மேலும் எதிரிகளை அவர்களின் தீய முடிவை எட்டச் செய்வான்.

இவ்வசனங்களின் பொருள் இவ்வாறாகும்: நம்பிக்கை கொண்டவர்கள் அல்லாஹ்வின்பாலும் அவனது தூதரின் பாலும் அவர்களுக்கிடையில் தீர்ப்பு வழங்குவதற்காக அழைக்கப்பட்டால் நாங்கள் செவியேற்றோம்; நாங்கள் கட்டுப்பட்டுவிட்டோம் என்று கூறுவதே அவர்களின் பதிலாக இருந்து வருகிறது. இத்தகையவர்களே வெற்றி பெறுவோர் ஆவர்.

அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கட்டுப்பட்டு நடந்து அல்லாஹ்வுக்கு அஞ்சி (பாதுகாப்பிற்குரிய) கேடயமாக அவனை எடுத்துக் கொள்பவர்கள் வெற்றி அடைபவர்கள் ஆவர்.

நீர் அவர்களுக்கு கட்டளையிட்டால் உடனே அவர்கள் வீடுகளிலிருந்து புறப்பட்டு விடுவதாக அல்லாஹ்வின் மீது உறுதிவாய்ந்த சத்தியங்கள் செய்கின்றனர். நீர் கூறுவீராக! சத்தியங்கள் செய்யாதீர்கள். பொதுவாக கட்டுப்பட்டு நடப்பதே போதுமானதாகும். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்வதை நன்கு தெரிந்து கொள்பவன் ஆவான்.

அல்லாஹ்விற்கும் கட்டுப்பட்டு நடங்கள். இத்தூதருக்கும் கட்டுப்பட்டு நடங்கள் என்று நீர் கூறுவீராக. எனவே நீங்கள் புறக்கணித்து விட்டால் அ(த்தூது)வரிடம் ஒப்படைக்கப்பட்டதற்கே அவர் பொறுப்பாளர் ஆவார். உங்களிடம் ஒப்படைக்கப்பட்டதற்கு நீங்கள் பொறுப்பாளர் ஆவீர்கள். அவருக்குக் கட்டுப்பட்டு நடந்தால் நீங்கள் நேர்வழியினைப் பெறுவீர்கள். மேலும் இத்தூதரின் பொறுப்பு தூதுச் செய்தியை தெளிவாக எடுத்துரைப்பது மட்டுமே ஆகும்.

அல்லாஹ்வின் உங்களுள் நம்பிக்கை கொண்டு நற்செயல் ஆற்றுபவர்களை அவர்களின் முன்னோர்களை கலீஃபாவாக (தலைவராக) ஆக்கியது போன்று இப்பூமியில் கலீஃபாவாக ஆக்குவதாகவும், அவன் அவர்களுக்காக விரும்பிய அவர்களின் மார்க்கத்தை அவர்களுக்கு உறுதிப்படுத்துவதாகவும் அவன் அவர்களுக்கு அவர்களது அச்சத்திற்குப் பிறகு அதற்குப் பதிலாக அமைதியினை வழங்குவதாகவும் அவர்களிடம் வாக்குறுதி அளித்துள்ளான். அவர்கள் என்னை வணங்குவார்கள். எதனையும் எனக்கு இணையாக்கமாட்டார்கள். இதன் பின்னரும் நிராகரிப்பவர்கள் கட்டுப்படாதவர்கள் ஆவார்கள்.

நீங்கள் தொழுகையினை நிலைநாட்டுங்கள். மேலும் ஸக்காத்து கொடுங்கள். மேலும் இத்தூதருக்குக் கட்டப்பட்டு நடங்கள். அப்போதுதான் உங்கள் மீது கருணை காட்டப்படும்.

(செவியேற்பவரே) நிராகரிப்பவர்கள் (தங்கள் சதித்திட்டங்களால்) இப்பூமியில் எம்மை செயலிழக்கச் செய்பவன் என்று நீர் ஒருபோதும் கருத வேண்டாம். அவர்களின் தங்குமிடம் நரகமேயாகும். அது மிகத் தீய தங்குமிடமாகும். (24:52–58)

எனவே எல்லாவற்றையும் அல்லாஹ் இங்கு தெளிவாக எடுத்துரைத்து விட்டான். நாங்கள் நம்பிக்கை கொண்டவர்கள் என்று ஆயிரம் வாதங்கள் நீங்கள் செய்யலாம். ஆனால் எதுவரை எல்லா சோதனைகளிலும் உறுதிப்பாட்டுடன் நிலைபெற்றிருப்பதில்லையோ மேலும் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கட்டளையின்படி முழு மனதுடனும் முழுமையான நம்பிக்கையுடனும் அமல் செய்யமாட்டீர்களோ அதுவரை வெற்றி கிடைக்காது.

எனவே உண்மையான வெற்றியைப் பெறுவதற்காகவும் பொருளுடையவர்களாக ஆகுவதற்கும் அல்லாஹ் மற்றும் அவனது தூதருக்கு முழுமையாக கட்டுப்படுவது அவசியமாகும். எனது அன்பிற்குரிய இறைவன் எனது ஒரு செயலின் காரணமாக என்னிடத்தில் கோபமடைந்து விடக்கூடாது என்ற அச்சத்தை உள்ளத்தில் கொண்டவர்களாக அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக அல்லாஹ்வின் கட்டளைகளின்படி அமல் செய்வது அவசியமாகும். ஒவ்வொரு நன்மையையும் ஒவ்வொரு நல்லொழுக்கத்தையும் மேற்கொள்வது அல்லாஹ்வின் கட்டளையாகும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் இறையச்சத்தில் நிலைநிற்பது அவசியமாகும். இவை அனைத்தும் நடைபெற்றால் பின்னர் வெற்றிகளும் கிடைக்கும். அல்லாஹ்வின் பாதுகாப்பும் கிடைத்துக் கொண்டிருக்கும்.

நாம் ஆய்வு செய்து பார்த்தால், கட்டுப்படுதில் பெற்றிருக்க வேண்டிய தரத்தை நாம் பெறவில்லை என்பது பெரும்பானலான சந்தர்ப்பங்களில் நமக்குத் தெரிய வரும். ஒரு விஷயத்தின்படி அமல் செய்து விட்டாலும் கூட அது விருப்பத்திற்கு எதிரானதாக இருக்கும் பட்சத்தில் மனமின்றி அமல் செய்யப்பட்டிருக்கும். அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கட்டுப்பட வேண்டும் என்ற கட்டளை இந்த வசனங்களில் வந்துள்ளது. கிலாஃபத்தை நிலைபெறச் செய்யக்கூடிய வாக்குறுதியைக் கொண்ட வசனங்களுடனும் இவ்விஷயம் இடம் பெற்றுள்ளது.

ஆக, கிலாஃபத் என்னும் அமைப்பு அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கட்டளைகள் மற்றும் அவர்களது அமைப்பின் ஓர் அங்கமாகும் என்று அல்லாஹ் ஒருவகையில் கூறுகின்றான். எனவே கிலாஃபத்தின் கூற்றின்படி அமல் செய்வது உங்களுக்கு அவசியமாகும். இது அல்லாஹ்வின் கட்டளைகளில் ஒரு கட்டளையாகும். இன்னும் சொல்வதென்றால், சமுதாய மற்றும் ஆன்மீக வாழ்க்கையைத் தொடரச் செய்வதற்கு நம்பிக்கையாளர்களுக்கு மிகவும் முக்கியமான விஷயமாகும். அவர்கள் தமது கட்டுப்படுதலின் தரத்தை உயர்த்த வேண்டும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த அளவுக்கு கூறியுள்ளார்கள் என்றால், எவர் என்னால் நியமிக்கப்பட்ட அமீருக்கு கட்டுப்பட்டாரோ அவர் எனக்கு கட்டுப்பட்டார். எனக்கு கட்டுப்பட்டவர் அல்லாஹ்விற்கு கட்டுப்பட்டார். மேலும் எவர் எனது அமீருக்கு கட்டுப்படவில்லையோ அவர் எனக்கு கட்டுப்படவில்லை. எவர் எனக்கு கட்டுப்படவில்லையோ அவர் இறைவனுக்கு கட்டுப்படவில்லை.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் அஹ்காம்... ஹதீஸ் எண் 7137)

காலத்தின் கலீஃபாவிற்கு கட்டுப்படுதல் என்பது சாதாரண அமீருக்கு கட்டுதலை விட மிக மிக அவசியமாகும். உள்ளார்ந்த அன்புடன் முழுமையாகக் கட்டுப்படுதலுக்குரிய முன்னுதாரணங்கள் நமக்கு சஹாபாக்களின் வாழ்க்கையில் தென்படுகின்றது. அதற்கு ஓர் உதாரணத்தை நான் தருகின்றேன்.

ஒரு போரில், போரின் பொறுப்பு ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஆனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஏதோவொரு காரணத்தினால் அன்னாரை மாற்றினார்கள். போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையிலேயே அன்னார் மாற்றப்பட்டார்கள். இனி ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் படையை வழிநடத்துவார்கள். அவர்களிடத்தில் பொறுப்பு வழங்கப்பட வேண்டும் என்ற காலத்தின் கலீஃபாவின் கட்டளை அந்நிலையில் வழங்கப்பட்டது. அப்போது ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் மிகச்சிறப்பாக வழிநடத்தி வருகின்றார்கள் என்ற எண்ணத்தில் அவர்களிடமிருந்து ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் பொறுப்பைப் பெற்றுக் கொள்ளவில்லை. ஆனால் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் நீங்கள் உடனடியாக என்னிடமிருந்து உங்கள் பொறுப்பைப் பெற்றுக் கொள்ளுங்கள். ஏனென்றால் இது காலத்தின் கலீஃபாவின் கட்டளையாகும் என்று கூறினார்கள்.

மேலும் நான், எந்த முறையீடும் செய்யாமல் அல்லது உள்ளத்தில் வேறு வகையான சிந்தனை எதுவும் கொள்ளாமல் முழுமையாகக் கட்டுப்பட்டவாறு நான் உங்களுக்குக்கீழ் பணியாற்றுவேன். நீங்கள் எவ்வாறு கூறுவீர்களோ அவ்வாறு நான் செயல்படுவேன் என்று அன்னார் கூறினார்கள்.

(தாரீக் திப்ரி தொகுதி 2 பக்கம் 356,357 – 1987 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஆக, இதுதான் ஒரு நம்பிக்கையாளரிடத்தில் இருக்க வேண்டிய கட்டுப்படுதலின் தரமாகும். ஒரு தீர்ப்பு தனக்கு எதிரானதாக ஆகிவிட்டால் முறையீடு செய்யத் துவங்கிவிடக்கூடாது. இது

நம்பிக்கையாளர்களின் பண்பு அல்ல. ஒரு பொறுப்பாளரை நீக்கி விட்டு இன்னொருவர் நியமிக்கப்பட்டால் பணி செய்வதை விட்டு விடக்கூடாது. எவர் அவ்வாறு செய்கின்றாரோ அவரிடத்தில் கட்டுப்படுதலும் இல்லை; இறைவன் மீதான அச்சமும் இல்லை; தக்வாவும் இல்லை.

இப்போது எனக்குத் தெரிய வந்துள்ளது. சில ஜமாஅத் தலைவர்கள் ஜூன் மாதத்தில் தமது பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னரே இனி நாம் ஏன் பணி செய்ய வேண்டும் என்று நினைத்து பணி செய்வதை விட்டு விட்டார்கள். நாம் நிரந்தரமாக பொறுப்பாளர்களாக இருப்போம் என்பதற்காக மட்டுமா இவர்கள் வேலை செய்து கொண்டிருந்தார்கள்? மே மற்றும் ஜூன் மாதங்களில் நிறைவேற்ற வேண்டிய கடமைகளின் பக்கம் அவர்கள் கவனம் செலுத்துவதில்லை. இது எப்படிப்பட்ட சிந்தனை என்றால் இது தனது மார்க்கப் பணிகளில் செய்கின்ற நம்பிக்கைத் துரோகம் ஆகும்.

இரண்டாவது, இது கிளர்ச்சியூட்டும் சிந்தனையாகும். மேலும் இது தம்மைத்தாமே கிலாஃபத்திற்கு கட்டுப்படுதல் என்ற வட்டத்திலிருந்து வெளியேறச் செய்யும் விஷயமாகும். ஏனென்றால் இப்போது காலத்தின் கலீஃபா ஒருவர் தலைவராக ஆறு ஆண்டுகள் மட்டுமே இருக்க முடியும் என்ற சட்டத்தை ஏற்றுக் கொண்டு விட்டார். எனவே நாமும் இனி முழுமையாக மனதுடன் பணி செய்ய மாட்டோம் என்பது இந்த சிந்தனையின் அடிப்படையாகும்.

எனவே இதுபோன்ற நபர்கள் தக்வாவை மேற்கொள்ள வேண்டும். மேலும் இறைவனுக்கு அஞ்ச வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில், எங்களுக்கு ஒரு விஷயம் விருப்பமாக இருந்தாலும்; இல்லாவிட்டாலும் நாங்கள் செவியேற்போம்; கட்டுப்படுவோம் என்ற விஷயத்தின் அடிப்படையில் பைஅத் வாங்கினார்கள்.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் அஹ்காம்... ஹதீஸ் எண் 7199)

பின்னர் ஒரு முறை நபி (ஸல்) அவர்கள், எவர் அல்லாஹ்வுக்கு கட்டுப்படுவதிலிருந்து விலகிக் கொண்டாரோ அவர் கியாமத் நாளன்று அல்லாஹ்வை இந்த நிலையில் சந்திப்பார். அதாவது தனது செயலுக்கு அவரிடத்தில் எந்த ஆதாரமும் இருக்காது; எந்த நியாயமான காரணமும் அவரிடத்தில் இருக்காது. எவர் காலத்தின் இமாமிடத்தில் பைஅத் செய்யாமல் மரணித்தாரோ அவர் அறிவீனமான மற்றும் வழிகேடான மரணத்தை அடைந்தார் என்றும் கூறினார்கள். (சஹீஹ் முஸ்லிம்... ஹதீஸ் எண் 1851)

எனவே காலத்தின் இமாமிடம் நாம் பைஅத் செய்துள்ளோம். இது நமது நற்பாக்கியமாகும். மேலும் காலத்தின் இமாமை நிரகாரித்தல் என்ற அறிவீனங்களின் கூட்டத்தில் நாம் இணையவில்லை. இதுவும் நமது நற்பாக்கியமாகும். ஆனால் அவரை ஒப்புக் கொண்ட பிறகு நமது செயல் அறிவீனர்களின் செயலாக இருந்தால் தம்மைத்தாமே செயல் ரீதியாக அந்த பைஅத்திலிருந்து வெளியேற்றக் கூடியதாக அமைந்து விடும். மேலும் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கட்டுப்படுதலிலிருந்து வெளியேறுபவர்களாக நாம் இருப்போம்.

எனவே பைஅத்திற்குப் பிறகு தமது சிந்தனைகளை சரியான திசையில் வைப்பதும் முழுமையான கட்டுப்படுதலுக்குரிய முன்னுதாரணங்களை வெளிப்படுத்துவதும் மிகவும் அவசியமாகும். காலத்தின் இமாம் தனது பைஅத்தின் கீழ் வரக்கூடியவர்களின் தரம் எப்படி இருக்க வேண்டும் என்று கூறியுள்ளார்கள்.

ஒரு சந்தர்ப்பத்தில் அன்னார் இவ்வாறு கூறினார்கள்: எமது போதனையை செயல் திட்டமாக ஆக்கிக் கொள்கின்ற நபரே எமது ஜமாஅத்தில் நுழைகின்றார். தனது ஆற்றல் மற்றும் முயற்சிக்கேற்ப அவர் அதன்படி செயல்படுகின்றார். ஆனால் எவர் வெறும் பெயரை மட்டும் சேர்த்துக் கொண்டு போதனைக்கேற்ப செயல்படுவதில்லையோ அவர் நினைவில் கொள்ளட்டும். அல்லாஹ் இந்த ஜமாஅத்தை ஒரு சிறப்பான ஜமாஅத்தாக ஆக்குவதற்கு எண்ணியுள்ளான். மேலும் வெறும் பெயரை மட்டும் சேர்த்துக் கொள்வதால் எனது ஜமாஅத்தில் இணைந்தவராக அவர் ஆகிவிட முடியாது. அதாவது அவரின் செயல் நிலை இந்த போதனைகளுக்கேற்ப இல்லையென்றால் அவர் வெறும் பெயரை மட்டும் ஜமாஅத்தில் சேர்த்துக் கொண்டவராகவே இருப்பார்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: என்னைப் பொருத்தவரை அத்தகைய நபர் எனது ஜமாஅத்தைச் சார்ந்தவர் அல்ல.

மேலும் அன்னார் கூறுகின்றார்கள்: எம்மால் வழங்கப்பட்ட இந்த போதனைக்கேற்ப உங்களின் செயல்களை உங்களால் இயன்றவரை ஆக்கிக் கொள்ளுங்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 439)

அன்னார் கூறுகின்றார்கள்: அந்த போதனை என்னவென்றால், குழப்பத்திற்குரிய விஷயங்களைப் பேசாதீர்கள். தீங்கிழைக்காதீர்கள். ஏசிப்பேசினால் பொறுமையை மேற்கொள்ளுங்கள். எவருடனும் போட்டி போடாதீர்கள். அதாவது வீணான அறிவீனமான விஷயங்களில் போட்டி போடாதீர்கள். மேலும் இப்போது இந்த நபர் பொறுப்பாளராகி விட்டார். எனவே நான் கட்டுப்படமாட்டேன். அல்லது நான் மாற்றப்பட்டுள்ளேன். எனவே நான் கட்டுப்படமாட்டேன் என்று என்றெல்லாம் போட்டி போடக்கூடாது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எவர் உம்மை எதிர்ப்பாரோ அவருடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். சாதாரண விவகாரங்களிலும், அன்றாட விவகாரங்களிலும், சண்டை சச்சரவுகளிலும் எவர் உம்மை எதிர்ப்பாரோ அவருடனும் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். ஒருவேளை வீணான காரியங்களிலும், அறிவீனமான விஷயங்களிலும் உம்மை எதிர்த்தால் அப்போதும் கண்டும் காணாமல் நடந்து கொள்ளுங்கள்.

மாறாக, வெறும் கண்டும் காணாமல் நடந்து கொண்டால் மட்டும் போதாது; அவருடன் நல்ல முறையிலும் நடந்து கொள்ளுங்கள். அழகிய முறையில் பேசுகின்ற சிறந்த முன்மாதிரியைக் காட்டுங்கள். நல்லொழுக்கத்துடன் பேசுங்கள். நாவை மென்மையாக பயன்படுத்துங்கள். அவரிடத்தில் அழகிய முன்மாதிரியை காட்டுங்கள். ஒவ்வொரு கட்டளைக்கும் உண்மையான உள்ளத்துடன் கட்டுப்படுங்கள். இறைவன் திருப்தியடையும் வகையிலும், இவர் பைஅத் செய்து இப்போது முன்பு இருந்தவரைப் போன்று இல்லை என்று எதிரி அறிந்து கொள்ளும் வகையில் ஒவ்வொரு கட்டளைக்கும் கட்டுப்படுங்கள். வழக்குகளில் உண்மையான சாட்சியம் கூறுங்கள். உண்மையான உள்ளத்துடனும் தைரியத்துடனும் நேர்மையின் வழி நடப்பவராக ஆகி விடுவது இந்த ஜமாஅத்தில் இணையக் கூடியவருக்கு அவசியமாகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 413)

அடுத்து அல்லாஹ் கூறுகின்றான்: நீர் கட்டளையிட்டால் நாங்கள் இதைச் செய்து விடுவோம். அதைச் செய்து விடுவோம் என்று இம்மக்கள் பெரும் சத்தியம் செய்கின்றனர். ஆனால் நீர் கட்டளையிட்டால் அதன்படி அவர்கள் செயல்படுவதில்லை.

எனவே நீங்கள் தேவையின்றி சத்தியம் செய்ய வேண்டாம். பெரும் பெரும் வாக்குறுதிகளையும் வழங்க வேண்டாம். பொதுவாக கட்டுப்பட்டு நடந்தால் அதுவே போதுமானது என்று அல்லாஹ் கூறுகின்றான்.

சாதாரணமாக கருதப்படுகின்ற கட்டுப்படுதலை நீங்கள் வெளிப்படுத்தினாலே நீங்கள் கட்டளையை ஏற்றுக் கொண்டதாக நாம் கருதிக் கொள்வோம். அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கு அறிபவனாவான். மேலும் உங்களின் உள்ளங்களின் நிலையையும் நன்கு அறிந்தவன் ஆவான்.

எனவே பொதுவாக கட்டுப்படுதல் என்பது, அல்லாஹ்விற்குரிய உரிமைகளை வழங்குவதும், அவனது இறைவணக்கத்தை அழகுபடுத்தி நிறைவேற்றுவதுமே ஆகும். ரமலான் மாதமாகிய இன்றைய நாட்களில் ஏற்பட்டுள்ள கவனத்தைத் தொடர்ந்து நிலைநாட்டுங்கள். அல்லாஹ்வின் கட்டளையின்படி அமல் செய்தவாறு அவனது அடியார்களுக்குரிய உரிமையையும் வழங்குங்கள். நான் ஏற்கனவே கூறிய ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றுகளின்படி செயல்படுங்கள்.

அதாவது எல்லா வகையான குழப்பங்களிலிருந்தும் தவிர்ந்து நில்லுங்கள். மேலும் எல்லா வகையான தீங்கு மற்றும் சண்டை சச்சரவுகளிலிருந்தும் விலகிக் கொள்ளுங்கள். உங்களது ஒழுக்கங்களை உயர்ந்ததாக ஆக்கிக் கொள்ளுங்கள். அஹ்மதி மற்றும் அஹ்மதி அல்லாதவருக்கிடையில் வித்தியாசம் தெளிவாகத் தென்படும் வகையில் உங்களது ஒழுக்கத்தை உயர்ந்ததாக ஆக்கிக் கொள்ளுங்கள். எப்போதும் உண்மையில் நிலைத்து நில்லுங்கள்.

சுருக்கமாக எல்லா வகையான நன்மைகளையும் செய்வது அவசியமாகும். மேலும் இதுவே பொதுவான கட்டுப்படுதலாகும். இதனைச் செய்வதற்கே அல்லாஹ் நமக்குக் கட்டளையிட்டுள்ளான். இதனைச் செய்யும்படியே அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களும் நமக்குக் கட்டளை வழங்கியுள்ளார்கள். மேலும் இதே ஆசையைத் தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் நம்மிடம் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

மேலும் தனது ஜமாஅத்தின் உறுப்பினர்களுக்கு இதனை செய்வதற்கே கட்டளையிட்டுள்ளார்கள். அஹ்மதிய்யா கிலாஃபத் இவ்விஷயங்களின் பக்கமே கவனமூட்டி வந்துள்ளது. கடந்த 111 ஆண்டுகளாக இவ்விஷயங்களின் பக்கம் கிலாஃபத்தின் சார்பாக தொடர்ச்சியாக கவனமூட்டப்படுகின்றது. மேலும் நிர்வாக விவகாரங்களிலும் முழுமையாகக் கட்டுப்படுவதற்குரிய முன்மாதிரிகளைக் காட்டுங்கள். வெறும் மார்க்கம் மற்றும் ஆன்மீக விவகாரங்களில் போதுமனதல்ல.

ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் வெளிப்படுத்திய முன்மாதிரியைப் போன்று வெளிப்படுத்த வேண்டும். இது நல்ல தீர்மானமா? இல்லையா? என்ற வீண் தர்க்கங்களில் ஈடுபடாதீர்கள். ஆயினும், அல்லாஹ் மற்றும் அவனது தூதருக்கு எதிரானதாக ஒரு கட்டளை இருக்குமென்றால் அது நல்ல தீர்மானமாக இருக்காது. எனவே நாங்கள் காலத்தின் கலீஃபா எந்த நல்ல தீர்மானங்கள் எடுப்பார்களோ அதற்குக் கட்டுப்பட்டு நடப்பதை அவசியம் எனக் கருதுவோம் என நாம் உறுதிமொழி எடுக்கின்றோம். இதிலிருந்து ஒவ்வொருவரும் நல்ல தீர்மானத்தைப் பற்றி சுயமாக உருவாக்கிக் கொண்ட விளக்கங்களின் பக்கம் செல்ல வேண்டாம். அதாவது இது நல்ல தீர்மானம். இது நல்ல தீர்மானம் இல்லை என்ற சுய விளக்கத்தை சுயமாக எவரும் கொடுக்க வேண்டாம்.

போரின் நிலையிலும் போருக்கிடையிலும் அதிலும் குறிப்பாக படைகள் எதிரும் புதிருமாக நிற்கின்ற தருணத்திலும் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களின் செயல் திட்டங்கள் நல்லதாக இருந்து அதன் மூலம் முஸ்லிம்கள் பயனடைந்து கொண்டிருக்கின்ற நிலையில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடமிருந்து வந்த தீர்மானம் நல்ல தீர்மானமாக இல்லை என்று ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் கூறவில்லை. மாறாக அன்னார் முழுமையாக கட்டுப்பட்டவர்களாக ஹஸ்ரத் உபூ உபைதா (ரலி) அவர்களின் தலைமையின் கீழ் ஒரு சாதாரண போர் வீரர் என்ற அந்தஸ்தில் போர் புரிவதையே பரக்கத்திற்குரியதாகக் கருதினார்கள்.

மேலும் எந்த மக்கள் இது நல்ல தீர்மானம்; இது தவறான தீர்மானம் என்ற சந்தேகத்தில் வீழ்கின்றார்களோ மேலும் வீண் சர்ச்சைகளில் ஈடுபடுகிறார்களோ அதுபோன்ற மக்களைப் பற்றி ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

நல்ல தீர்மானங்களில் நாங்கள் கட்டுப்பட்டு நடப்போம் என்ற கருத்தைப் புரிவதில் தவறு ஏற்பட்டுள்ளது. மேலும் எதனை நாங்கள் நல்ல தீர்மானமாக கருதமாட்டாமோ அதற்கு நாங்கள் கட்டுப்படமாட்டோம் என்றும் கூறப்படுகிறது. நாங்கள் இதனை நல்ல தீர்மானமாகக் கருதவில்லை. எனவே நாங்கள் அதற்கு கட்டுப்படமாட்டோம் என மக்கள் சுயமாக முடிவெடுத்துக் கொள்கின்றனர். இந்த சொல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காகவும் வந்துள்ளது.

وَلَا يَعْصِينَكَ فِي مَعْرُوفٍ – நல்ல தீர்மானங்களில் நாங்கள் கட்டுப்படாமல் இருக்க மாட்டோம் என்று கூறப்பட்டுள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் குறைகள் பற்றி பட்டியலை எவரும் தாயரித்திருக்கின்றாரா? அல்லாஹ் நம்மைக் காப்பானாக. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் குறைகள் அல்லது பலவீனங்களை எவரும் தயாரித்துள்ளாரா? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இன்ன இன்ன கட்டளைகள் நல்லவையாகும்; மேலும் இன்ன இன்ன தீர்மானங்கள் தவறானதாகும் நவூதுபில்லாஹ் என்று நாம் அறிந்து கொள்ளக்கூடிய வகையில் எவராவது இது போன்ற பட்டியலை தயாரித்துள்ளாரா?

அன்னார் கூறுகின்றார்கள்: இதே போன்று தான் ஹஸ்ரத் சாஹிப் அவர்களும் அதாவது வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் பைஅத் நிபந்தனைகளில் நல்ல தீர்மானங்களில் கட்டுப்படுவோம் என்று எழுதியுள்ளார்கள். இதில் ஒரு இரகசியம் உள்ளது. (ஹகாயிக்குல் ஃபுர்கான் தொகுதி 4 பக்கம் 75,76)

அந்த இரகசியம் என்னவென்றால், நபி மற்றும் கலீஃபா அல்லாஹ்வால் கூறப்பட்ட கட்டளைகளுக்கேற்பவே பிறருக்கு கட்டளையிடுகின்றார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் ஒரு சந்தர்ப்பத்தில் இந்த வார்த்தைக்கு இவ்வாறு விளக்கம் அளித்துள்ளார்கள்:

அதாவது இந்த நபி அறிவுக்கு எதிரான எந்தவொரு விஷயத்திற்கும் கட்டளையிடுவதில்லை. மேலும் எந்த விஷயங்களை அறிவு தடை செய்கின்றதோ அவ்விஷயங்களிலிருந்து அவரும் தடை செய்கின்றார். மேலும் தூய விஷயங்களை அவர் ஆகுமானதாகவும், தூய்மையற்ற விஷயங்களை அவர் ஆகுமற்றதாகவும் ஆக்கியுள்ளார். இதைப் பற்றிய விளக்கத்தை அல்லாஹ் நமக்கு திருக்குர்ஆனில் எடுத்துரைத்துள்ளான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் எடுத்துரைத்துள்ளார்கள். ஆகுமான மற்றும் ஆகுமற்ற கட்டளைகள் அனைத்தையும் நமக்குத் தெளிவாக எடுத்துக் கூறி விட்டார்கள். அல்லாஹ் மற்றும் அவனது தூதரை எவர் பின்பற்றி நடப்பாரோ அவரே இரட்சிப்பைப் பெறுவார். எவர் இந்த விஷயங்களின்படி அமல் செய்வாரோ அவரே இரட்சிப்பு பெறுவார்.

எனவே எப்போதும் இந்த விஷயத்தை நினைவில் கொள்ள வேண்டும். அல்லாஹ் மற்றும் அவனது தூதரைப் பின்பற்றியவாறு ஷரீஅத் மற்றும் சுன்னத்திற்கேற்பவே கிலாஃபத்தின் சார்பாக கட்டளைகள் வழங்கப்படுகின்றன. மேலும் வழங்கப்பட்டுக் கொண்டே

இருக்கும். நீங்கள் கட்டுப்பட்டால் நேர்வழி பெறுவீர்கள் என்று அல்லாஹ் கூறுகின்றான். அதை விட்டு விலகி உங்களுக்கு இரட்சிப்பிற்குரிய பாதை வேறு எங்கும் கிடைக்காது என்றும் அல்லாஹ் கூறிவிட்டான்.

அல்லாஹ் மற்றும் அவனது தூதருக்குக் கட்டுப்பட்டு நடப்பவர்கள் மற்றும் நற்செயல்கள் ஆற்றுபவர்களிடத்தில் கிலாஃபத் நிலைபெற்றிருக்கும் என்று அல்லாஹ் வாக்குறுதி வழங்கியுள்ளான். நற்செயல்கள் என்பது தனது இறைவணக்கத்தின் பக்கம் கவனம் செலுத்துவதும் மேலும் தமது இறைவணக்கங்களை அல்லாஹ்விற்கு மட்டும் களங்கற்றதாக ஆக்கிக் கொள்வது என்பது மட்டுமல்ல. மாறாக, எல்லா வகையான ஷிர்க்கிலிருந்தும் தப்பித்துக் கொள்ள வேண்டும். வெளிப்படையான ஷிர்க்கிலிருந்து தப்பித்தால் மட்டும் போதுமானதல்ல.

இன்னும் சொல்வதென்றால், உலக ஆசைகள் மற்றும் அதனைப் பின்தொடர்ந்து மார்க்கத்தை இரண்டாம் நிலையாக ஆக்கிக் கொள்கின்ற ஷிர்க்கான நிலை உள்ளது. அதிலிருந்தும் தப்பித்துக் கொள்ள வேண்டும். நிச்சயமாக இது மாபெரும் நன்மையாகும். ஆனால் கட்டுப்படுதல் என்பது மிகவும் அவசியமாகும். எனவே கிலாஃபத் என்ற அந்த வாக்குறுதியிலிருந்து முழுமையாகவும் சரியாகவும் பயன்பெற வேண்டுமென்றால் பின்னர் தமது இறைவணக்கங்களைப் பாதுகாத்துக் கொள்வது மட்டும் அவசியமல்ல.

மாறாக, உலக ஆசைகள் என்ற ஷிர்க்கிலிருந்து தப்பிப்பதும் அவசியமாகும். காலத்தின் கலீஃபாவிற்கு முழுமையாகக் கட்டுப்படுவதும் அவசியமாகும். அவ்வாறில்லையென்றால், கட்டுப்படாதவர்களின் வட்டத்தில் சேர்க்கப்படுவார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியதுபோன்று, உண்மையில் அத்தகைய நபர் பைஅத்திலிருந்தே வெளியேறி விடுவார்.

அடுத்து அல்லாஹ் கூறுகின்றான்: நம்பிக்கையாளர்களின் ஜமாஅத் என்பது கிலாஃபத்துடன் தொடர்புடைய ஜமாஅத்தும், தொழுகைகளை நிலைநாட்டக்கூடிய ஜமாஅத்தும், தொழுகைகளை நிலைநாட்டுவதன் பக்கம் கவனம் செலுத்தும் ஜமாஅத்தும் ஆகும். கிலாஃபத்துடன் தொடர்பு கொண்டுள்ள ஜமாஅத் தொழுகைகளை நிலைநாட்டக்கூடிய ஜமாஅத்தாகும். மேலும் பள்ளிவாசல்களை நிரப்பக்கூடிய மற்றும் ஸக்காத்து கொடுக்ககூடிய ஜமாஅத் ஆகும். மேலும் தனது செல்வங்களை சுத்தப்படுத்தக்கூடிய ஜமாஅத் ஆகும். மேலும் இறைவன் மற்றும் அவனது தூதர் மற்றும் அவனது மார்க்கத்திற்காக பொருள் தியாகம் செய்யக்கூடிய ஜமாஅத்தாகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கட்டளைகள் மற்றும் அன்னாரின் சுன்னத்தின்படி இயன்றவரை செயல்படக்கூடிய ஜமாஅத்தாகும்.

இந்த நிலை உருவாகி விடுகின்றபோது பின்னர் அதுபோன்ற அடியார்கள் மீது அல்லாஹ்வும் கருணை காட்டுகின்றான். எனவே அல்லாஹ்வின் கருணையை ஈர்ப்பதற்காக தனது நிலைகளை சரியாக ஆக்கிக் கொள்வது அவசியமாகும். அல்லாஹ்வின் கருணை நம்மை அவனது ரஹ்மானிய்யத் மற்றும் ரஹீமிய்யத் என்ற போர்வையில் போர்த்திக் கொள்கின்ற போது பின்னர் எதிரியின் ஒவ்வொரு சதித்திட்டமும் அவனுக்கு எதிராகத் திருப்பி விடப்படும். மேலும் அவன் தனது தீய முடிவை எட்டுவான். இன்ஷா அல்லாஹ்.

எனவே அல்லாஹ்வின் அருட்களை ஈர்ப்பதற்காக நாம் நம்மை நாமே ஆய்வு செய்வது அவசியமாகும். நம்மிடத்தில் எந்த அளவுக்கு கட்டுப்படுதலுக்குரிய தரம் உள்ளது என்றும் மேலும் நாம் எந்த அளவுக்கு அல்லாஹ்வின் கட்டளைகளின்படி அமல் செய்கின்றோம் என்றும் மேலும் நாம் நமது இறைவணக்கங்களின் தரத்தை எந்த அளவு அழகுபடுத்திக் கொண்டிருக்கின்றோம் என்றும் நம்மை நாமே நாம் ஆய்வு செய்ய வேண்டும். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சுன்னத்தின்படி நாம் அமல் செய்வதற்கு முயற்சி செய்கின்றோம் என்றும் நம்மிடத்தில் எந்த அளவுக்குக் கட்டுப்படுதலின் தரம் உள்ளது என்றும் நாம் நம்மை ஆய்வு செய்ய வேண்டும். இந்த ஆய்வுகளை நாம் நமக்கு நாமே சுயமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இப்போது நான் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்களின் சில ஆதாரங்களின் அடிப்படையில் சில விஷயங்களை எடுத்து வைப்பேன். அதனை அன்னார் பல்வேறு சந்தர்ப்பங்களில் எடுத்துரைத்துள்ளார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மரணத்திற்குப் பிறகு ஜமாஅத்தின் ஒவ்வொரு உறுப்பினரையும் நிம்மதியிழந்து விடச்செய்யக்கூடிய சூழலை ஜமாஅத்திற்கு எதிர்கொள்ள வேண்டியது வந்தது. பின்னர் கிலாஃபத் அமைதியை வழங்கியது. மேலும் அதன் பிறகு கிலாஃபத்தின் பையத்திலிருந்து விலகிவிட்ட பய்காமி அல்லது பையத் செய்யதாவர்கள் என்று அழைக்கப்பட்ட அந்த மக்களின் நடவடிக்கை அப்போது எப்படி இருந்தது இரண்டாவது கலீஃபா தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு அவர்களின் நடவடிக்கை எப்படி இருந்தது என்பதையும் அந்த கூற்றுகள் விளக்குகின்றன. அதாவது முதலில் அவர்களின் எண்ணங்கள் எப்படிப்பட்டதாக இருந்தன பின்னர் அவர்களின் எண்ணங்கள் எப்படி இருந்தன என்பதையும் அவை விவரிக்கின்றது.

பின்னர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மரணத்திற்குப் பிறகு எதிரி எவ்வாறு மகிழ்ச்சியாக இருந்தான்? ஆனால் முதலாவது கலீஃபா தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு எதிரி எவ்வாறு நிராசை அடைந்தான்? என்பதையும் அது தெளிவாக்குகின்றது. அடுத்து முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் மரணத்திற்குப் பிறகு அஹ்மதிய்யத்தின் எதிரிகளுக்கு இனி ஜமாஅத் துண்டு துண்டாகி விடும் என்ற ஒரு நம்பிக்கை ஏற்பட்டது. ஆனால் மீண்டும் அல்லாஹ் நம்பிக்கையாளர்களின் ஜமாஅத்தை ஒன்று கூட்டினான். மேலும் அச்சத்தின் நிலை அமைதியில் எவ்வாறு மாறியது என்பதையும் அவை தெளிவாக்குகின்றது.

இந்த சில வரலாற்று ஆதாரங்கள் இளைஞர்கள் மற்றும் குறைவான அறிவுபடைத்தவர்களின் ஈமானுனை வலுவூட்டுவதற்கும் அவசியமாகும். நான் இப்போது உங்கள் முன்னிலையில் அந்த கூற்றுகளை எடுத்து வைக்க விரும்புகின்றேன். மேலும் ஒவ்வொருவரும் வரலாற்றிலிருந்து சிறிதளவாவது அறிந்து கொள்ள முடியும் என்ற அடிப்படையிலும் அதனை எடுத்துரைப்பது அவசியமாகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்தின் தருவாயில் முஸ்லிம்களின் நிலையை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மரணத் தருவாயிலும் அதுபோன்ற ஒரு நிலையே எங்களின் நிலையாக இருந்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மரணத்தின்போதும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத் தருவாயில் சஹாபாக்களிடம் எப்படிப்பட்ட மனநிலை இருந்ததோ அதேபோன்ற மனநிலைதான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மரணத்தின் போதும் ஜமாஅத்தின் மனநிலையாக இருந்தது.

எனவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இப்போது மரணமடையமாட்டார்கள் என்றே நாங்கள் கருதி வந்தோம். அதன் விளைவாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மரணமடைந்து விட்டால் பின்னர் என்ன நடக்கும் என்ற எண்ணம் ஒரு நிமிடத்திற்குக் கூட எங்களின் உள்ளங்களின் தோன்றவில்லை.

அன்னார் கூறுகின்றார்கள்: அப்போது நான் குழந்தையாக இல்லை. மாறாக, இளமைப் பருவத்தை அடைந்திருந்தேன். நான் கட்டுரைகளை எழுதி வந்தேன். நான் ஒரு பத்திரிகையின் ஆசிரியராகவும் இருந்து வந்தேன். ஆனால் நான் அல்லாஹ்வின் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கடைசி காலத்தில் தொடர்ச்சியாக அன்னாரின் மரணச் செய்தியை அறிவிக்கக்கூடிய தொடர்ச்சியான பல இல்ஹாம்கள் வந்து கொண்டிருந்தபோதிலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மரணமடைந்து விடுவார்கள் என்ற எண்ணம் ஒரு நிமிடத்திற்குக் கூட இன்னும் கூறப்போனால் ஒரு நொடிப்பொழுதுகூட எனக்குத் தோன்றியதில்லை.

இறுதி நாட்களில் அன்னாரின் மரணத்தைப் பிற்றிய இல்ஹாம் மிக அதிகமாகவும் முன்பை விட அதிகமாகவும் வந்து கொண்டிருந்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இவ்வாறு இல்ஹாம் வந்து கொண்டிருந்தபோதிலும் அன்னாரின் மரணத்தின் ஆண்டு மற்றும் தேதி குறிப்பிடப்பட்டு சில இல்ஹாம்களும் கஷ்ஃபுகளும் வந்து கொண்டிருந்தபோதிலும் எங்களுக்கு அப்படிப்பட்டதொரு எண்ணம் தோன்றியதேயில்லை. நாங்கள் அல் வஸிய்யத் புத்தகத்தை படித்திருந்தபோதிலும் இந்த விஷயங்கள் எல்லாம் இன்றிலிருந்து இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பிறகு முழுமையடையும் என்றே கருதி வந்தோம்.

எனவேதான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மரணமடைந்து விட்டால் என்ன நடக்கும் என்ற எண்ணம் உள்ளத்தில் தோன்றாமல் இருந்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமது காலத்தில் மரணமடையமாட்டார்கள் என்று நாங்கள் கருதி இருந்தோம். மேலும் ஜமாஅத்தின் நிலையும் இப்படித்தான் இருந்தது என்பதால் அன்னார் உண்மையிலேயே மரணித்து விட்டபோது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள் என்பதை ஏற்றுக் கொள்வதே எங்களுக்குக் கடினமாக இருந்தது.

எனக்கு நன்றாக நினைவில் உள்ளது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மரணத்திற்குப் பிறகு அன்னாரைக் குளிப்பாட்டி கஃபன் அணிவிக்கப்பட்டது. அதுபோன்ற சந்தர்ப்பங்களில் சில முறை காற்று பட்டு ஆடை அசைவதும் அல்லது மீசை அசைவதும், தலை முடி அசைவதும் இயல்பான ஒன்று. ஆனால் சில நண்பர்கள் ஓடோடி வந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இன்னும் உயிருடன்தான் இருக்கின்றார்கள். நாங்கள் அன்னாருடைய ஆடை அசைந்ததைக் கண்டோம். அல்லது மீசையின் முடிகள் அசைந்ததைக் கண்டோம் என்றும் நாங்கள் அன்னாருடைய கஃபன் துணி அசைந்ததைக் கண்டோம் என்றும் சிலர் எங்களிடம் வந்து கூறுவார்கள். அதன் பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உடல் காதியான் கொண்டு வரப்பட்டு தோட்டத்தில் ஒரு வீட்டினுள் வைக்கப்பட்டது. அப்போது **8,9** மணி இருக்கும்.

இந்த சம்பவத்தை எடுத்துரைத்த பிறகு அன்னார் தொடர்ந்து கூறியுள்ளார்கள்: அன்னாருடைய உடல் காதியான் வந்தடைந்தபோது **8,9** மணி இருக்கும். அப்போது காஜா கமாலுத்தீன் சாஹிப் அவர்கள் தோட்டத்திற்கு வந்தார்கள். மேலும் என்னை தனிமையில் அழைத்துச் சென்று, ஹஸ்ரத் சாஹிப் அவர்களின் மரணத்திற்குப் பிறகு இனி என்ன நடக்கும் என்று மியான் சாஹிப் நீங்கள் சிந்தித்தீர்களா? இல்லையா? என்று என்னிடம் கேட்டார்கள். அப்போது நான் ஏதாவது செய்ய வேண்டும். ஆனால் என்ன செய்வதைப் பற்றி என்னால் கூற முடியாது என்று கூறினேன். அதற்கு அன்னார், என்னைப் பொருத்தவரை நாம் அனைவரும் ஹஸ்ரத் மவ்லவி சாஹிப் அவர்களிடம் அதாவது ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களிடம் பைஅத் செய்துவிட வேண்டும் என்று அன்னார் என்னிடம் கூறினார்கள்.

அப்போது எனது வயதின் காரணமாகவும், மேலும் புத்தகத்தை வாசித்து வந்தபோதிலும் மிகக் குறைவாகவே புத்தகங்களை படித்திருந்ததாலும் சிலர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தனது மரணத்திற்குப் பிறகு வேறு எவரிடமும் பைஅத் செய்யும்படி எங்கும் எழுதியிருக்கவில்லையோ என்று நான் கூறினேன். மேலும் அவ்வாறிருக்க நாம் எப்படி மவ்லவி சாஹிப் அவர்களிடத்தில் பைஅத் செய்வது என்றும் கூறினேன்.

அல் வஸிய்யத் புத்தகத்தில் அதைப் பற்றிய குறிப்பு இடம்பெற்றிருந்தது. ஆனால் அந்த சமயத்தில் எனது எண்ணம் அதன் பக்கம் செல்லவில்லை. எவ்வாறிருப்பினும் அந்த தருணத்தில் காஜா கமாலுத்தீன் சாஹிப் அவர்கள் என்னிடத்தில் தர்க்கம் செய்யத் தொடங்கி விட்டார்கள். மேலும் இப்போது ஒரு நபரின் கையில் நாம் பைஅத் செய்யவில்லை என்றால் நமது ஜமாஅத் அழிந்து விடும் என்று அன்னார் கூறினார்கள். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகும் சமுதாயம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்திருந்தது என்றும் என்னிடத்தில் கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு சமுதாயம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்திருந்தது என்றும், அன்னாரை கலீஃபாவாக ஒப்புக் கொண்டது என்பதையும் காஜா சாஹிப் அவர்கள் அப்போது என்னிடத்தில் எடுத்துரைத்துக் கொண்டிருந்தது மிக முக்கியத்துவம் வாய்ந்த விஷயமாகும். அடுத்து காஜா சாஹிப் அவர்கள், இப்போது நாம் ஒரு நபரிடத்தில் பைஅத் செய்து விட வேண்டும். மேலும் அந்த பதவிக்கு ஹஸ்ரத் மவ்லவி சாஹிப் அவர்களை விட நமது ஜமாஅத்தில் பொருத்தமான நபர் வேறு யாருமில்லை என்றும் என்னிடத்தில் கூறினார்கள். மேலும் மவ்லவி முஹம்மது அலி சாஹிப் அவர்களின் கருத்தும் இதுவாகவே உள்ளது.

அதாவது காஜா சாஹிப் அவர்கள் மட்டும் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களிடம் இதனைக் கூறவில்லை. மவ்லவி முஹம்மது அலி சாஹிப் அவர்களின் கருத்தும் இதுவாகவே இருந்தது. முழு ஜமாஅத்தும் மவ்லவி சாஹிப் அவர்களிடம் பைஅத் செய்ய வேண்டும் என்று கூறினார்கள்.

இறுதியில் ஜமாஅத் ஏகமனதாக நீங்கள் மக்களிடம் பைஅத் வாங்குங்கள் என்று ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களிடம் வேண்டியது. அதன் காரணமாக தோட்டத்தில் அனைத்து மக்களும் ஒன்று கூடினார்கள். அப்போது முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் சொற்பொழிவு ஒன்றை ஆற்றினார்கள். மேலும் எனக்கு தலைமை பதவியின் மீது எந்த ஆசையும் இல்லை என்றும் நான் வேறொருவரிடத்தில் பைஅத் செய்வதையே விரும்புகின்றேன் என்றும் கூறினார்கள். மேலும் அதற்காக அன்னார் முதலில் எனது பெயரை எடுத்துரைத்தார்கள்.

அதன் பின்னர் எனது பாட்டனார் மீர் நாஸிர் நவாப் சாஹிப் அவர்களின் பெயரையும், அதன் பிறகு எனது மச்சான் நவாப் முஹம்மது அலி கான் சாஹிப் அவர்களின் பெயரையும் அன்னார் நினைவு கூர்ந்தார்கள். இதே போன்று வேறு சில நண்பர்களின் பெயரையும் அன்னார் நினைவு கூர்ந்தார்கள். ஆனால் கிலாஃபத் பதவிக்கு தாங்களே தகுதி படைத்தவர்கள் என்று நாங்கள் அனைவரும் ஏகமனதாக கூறினோம். எனவே அன்னாரிடத்தில் அனைத்து மக்களும் பைஅத் செய்தார்கள்.

(கிலாஃபத்தே ராஷிதா, அன்வாருல் உலூம் தொகுதி 15 பக்கம் 489–491)

இன்னும் கூறப்போனால், சில அறிவிப்புகளின் அடிப்படையில் வஸிய்யத் புத்தகத்தின் ஒளியில் நாம் கட்டுப்பட வேண்டிய ஒரு கலீஃபாவை தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும் அதற்காக ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் பெயரை நான் முன்மொழிகின்றேன் என்றும் அன்னார் அறிவிப்பு ஒன்றை பிரசுரமாக அச்சிட்டு வெளியிட்டார்கள். எவ்வாறிருப்பினும் இது அன்னாரின் முந்தைய எண்ணமாக இருந்தது. அப்போதிருந்த மக்களின் சூழ்நிலையின் காரணமாக மேலும் தனது நோக்கத்தை முழுமை செய்து கொள்வதற்காக இந்த எண்ணம் அவர்களிடம் இருந்திருக்கலாம். அந்த நபர்கள் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களிடம் பைஅத் செய்திருந்தார்கள்.

ஆனால் உள்ளத்தால் கிலாஃபத்திற்கு இருக்க வேண்டிய உண்மையான கட்டுப்படுதலின் ஆன்மா அவர்களிடத்தில் இருக்கவில்லை. உள்ளத்தில் வேறு ஒன்று இருந்தது. அதன் காரணமாக கிலாஃபத்தை விட அஞ்ஜுமன் அமைப்பை எவ்வாறு உயர்வானதாக கருதலாம். அல்லது ஆக்கலாம். பின்னர் அதன் மூலம் அஞ்ஜுமன் அமைப்பின் மூலமாக அனைத்து அதிகாரங்களையும் எவ்வாறு அபகரித்துக் கொள்ளலாம் என்ற திட்டத்திலும் கவலையிலும் அவர்கள் இருந்து வந்தார்கள். இதுவே பைஅத்திலிருந்து வெளியேறிய அந்த நபர்களின் எண்ணமாகவும் சிந்தனையாகவும் இருந்தது.

அந்த நபர்களின் இந்த எண்ணத்தைப் பற்றி குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்:

ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களிடம் பைஅத் செய்து அப்போது 15,20 நாட்கள்தான் கழிந்திருந்தன. அப்படிப்பட்ட நிலையில் ஒரு நாள் மவ்லவி முஹம்மது அலி சாஹிப் அவர்கள் என்னை சந்தித்தார்கள். பின்னர் மியான் சாஹிப்! நமது ஜமாஅத்தின் அமைப்பு எவ்வாறு நடக்க வேண்டும் என்று நீங்கள் சிந்தித்தீர்களா? என்று கேட்டார்கள்.

அதற்கு நான், இனி அது தொடர்பாக சிந்திப்பதற்கு என்ன அவசியம் இருக்கின்றது? நாம் ஹஸ்ரத் மவ்லவி சாஹிப் அவர்களிடத்தில் பைஅத் செய்து விட்டோமே என்று கூறினேன். அதற்கு அவர், அது பீர் மற்றும் முரீத் என்ற அடிப்படையில் தான் அந்த பைஅத் நிகழ்ந்துள்ளது என்று கூறினார். ஆனால் இந்த ஜமாஅத்தின் அமைப்பை எவ்வாறு நடத்துவது என்பதே கேள்வியாகும்? என்று என்னிடம் கூறினார்.

அதற்கு நான் என்னைப் பொருத்தவரை சிந்திப்பற்கு தகுதி படைத்த விஷயமே இது இல்லை. ஏனென்றால் நாம் ஒருவரிடத்தில் பைஅத் செய்துவிட்டபிறகு அவரே ஜமாஅத் அமைப்பை எவ்வாறு நிலைபெறச் செய்து என்பதை நன்கு புரிந்து கொள்ளக் கூடியவராக இருக்கின்றார். நாம் அதில் தலையிடுவதற்கு என்ன அவசியம் வந்து விட்டது என்றும் கூறினேன். அப்போது அவர் அமைதியாகி விட்டார். ஆயினும், இது சிந்திக்கத்தக்க விஷயம்தான்.

(கிலாஃபத்தே ராஷிதா பக்கம் 48–50, அன்வாருல் உலூம் தொகுதி 15 பக்கம் 491)

எனக்கு இதில் திருப்தி ஏற்படவில்லை என்று கூறினார். ஆக இந்த விஷயங்களிலிருந்து அவர்களின் உள்ளார்ந்த நிலைகள் தெரிய வருகின்றது. ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களிடமும் கூட அவர்கள் உள்ளத்தால் பைஅத் செய்யவில்லை. மாறாக, ஏதோவொரு நோக்கத்திற்காகவே பைஅத் செய்தார்கள் என்ற அவர்களின் உள்ளார்ந்த நிலையும் நமக்குத் தெரிய வருகின்றது. எனவேதான் அவர்களிடத்தில் உள்ளார்ந்த அமைதி நிலைபெறவில்லை. கிலாஃபத்துடன் அமைதிக்கான வாக்குறுதி உள்ளது. மேலும் பைஅத்தின் மூலமாக அமைதி நிலை ஏற்படுவதற்கான வாக்குறுதியும் அல்லாஹ் செய்துள்ளான்.

ஆனால் அந்த நிலை அவர்களிடத்தில் ஏற்படவில்லை. கட்டுப்படுதல் என்ற வட்டத்தில் அவர்கள் இருக்க விரும்பவில்லை. இந்த ஆன்மீக அமைப்பையும் உலக அமைப்பைப் போன்று அவர்கள் நடத்த விரும்பினார்கள். பின்னர் அதன் விளைவையும் அவர்கள் கண்டு கொண்டார்கள். இப்போது பெயர் அளவில் சிலர் எஞ்சி இருக்கின்றார்கள். அவ்வளவுதான். ஒரு சிலரோ அல்லது சில நூறு நபர்களோ எங்கேயாவது இருக்கலாம்.

உண்மையாக கூறப்போவதாக இருந்தால் அவர்களில் ஒரு சிலரே எஞ்சி இருக்கின்றார்கள் என்றே கூற வேண்டும். இன்னும் கூறுவதாக இருந்தால் அவர்கள் உருவாக்கிய அமைப்பிற்கேற்ப ஒரு சிலரே அவர்களுடன் இருக்கின்றனர். ஆனால் கிலாஃபத்தின் நிழலின் கீழ் இருக்கக்கூடிய ஜமாஅத் இன்று அல்லாஹ்வின் அருளால் உலகின் 212 நாடுகளில் நிலைபெற்று விட்டது.

மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மரணத்தின்போது ஜமாஅத்தின் எதிர்காலம் குறித்து எதிரி என்ன கருத்தை வெளிப்படுத்தி வந்தான் என்பதைப் பற்றி எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மரணமடைந்து விட்டபோது இனி இந்த ஜமாஅத் அழிந்து விடும் என்றே பொதுவாகக் கருதப்பட்டது. மேலும் சந்தாக்கள் வருவது நின்றுவிடும். ஜமாஅத்தின் முன்னேற்றம் தடைபட்டு விடும் என்றே எதிரி மகிழ்ச்சியடைந்திருந்தான். ஏனென்றால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்காகவே மக்கள் சந்தா கொடுத்து வந்தார்கள். ஆனால் ஒன்றிரண்டு வருடங்களுக்குப் பிறகு ஜமாஅத் உறுப்பினர்களின் எண்ணிக்கை மட்டுமல்ல.

மாறாக, பொருளாதாரத்தின் தரமும் அதிகரித்து விட்டது. மேலும் மார்க்கத்தை பரப்புகின்ற பணியும் அதிகரித்தது. இதனை மக்கள் கண்டபோது இவ்வாறு புதிய கூற்று ஒன்றை அவர்கள் உருவாக்கிக் கொண்டார்கள். அதாவது உண்மையில் மவ்லவி நூருத்தீன் சாஹிப் அவர்கள் ஜமாஅத்தில் ஒரு பெரும் அறிஞர் ஆவார்கள். ஜமாஅத்தின் அனைத்து முன்னேற்றங்களும் அன்னாரையே சார்ந்திருக்கிறது. மேலும் மிர்ஸா சாஹிப் அவர்களின் வாழ்க்கையிலும் மவ்லவி சாஹிப் அவர்களே அனைத்துப் பணிகளையும் செய்து வந்தார்கள் என்று கூறத் தொடங்கினர்.

எனவே வெளிப்படையில் மிர்ஸா சாஹிப் அவர்களின் பெயர் இருந்த போதிலும் அன்னாரே அனைத்துப் பணிகளையும் செய்து வந்தார்கள் என்றே கூறினர். எனவே மவ்லவி நூருத்தீன் சாஹிப் அவர்களே இந்த அமைப்பை வழிநடத்தி வருகின்றார்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மரணத்திற்குப் பிறகு மவ்லவி சாஹிப் அவர்களின்

காலத்தில் ஜமாஅத் முன்பை விட அதிகமாக முன்னேற்றம் அடைந்து கொண்டிருக்கிறது.

முல்லாக்களைக் கொண்ட இரண்டாவது கூட்டம் முற்றிலும் தமக்கு மாற்றமான கூற்றை கூறியது. மவ்லவி நூருத்தீன் சாஹிப் அவர்கள் தான் அனைத்துப் பணிகளையும் செய்து வந்தார்கள் என்று நாங்கள் கூறவில்லையா? இப்போதும் கூட ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மரணத்தினால் எந்த வித்தியாசமும் ஏற்படவில்லை. மவ்லவி சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் மவ்லானா நூருத்தீன் சாஹிப் அவர்களின் காரணமாகவே இப்போதும் ஜமாஅத் நடந்து வருகின்றது என்று அவர்கள் மிக மகிழ்ச்சியுடன் மக்களிடையே பேசி வந்தனர்.

(குத்பாத்தே மஹ்மூது (ரலி) – தொகுதி 21 பக்கம் 413)

அடுத்து இது தொடர்பாக ஒரு மவ்லவி பற்றி குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

குஜராத்திலிருந்த நண்பர்கள் என்னிடம் கூறினார்கள். அதாவது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மரணமடைந்து விட்டபோது ஒரு அஹ்லே ஹதீஸ் மவ்லவி என்னிடம் வந்து, இப்போது நீங்கள் பிடிக்கப்பட்டு விட்டீர்கள் என்று என்னிடம் கூறினார். ஏனென்றால் நபித்துவத்திற்குப் பிறகு கிலாஃபத் ஏற்படும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நீங்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை நபி என்று கூறி வந்தீர்கள். அவர் ஷரீஅத் நபியாகவோ அல்லது ஷரீஅத் வழங்கப்படாத நபியாகவே இருந்திருக்கலாம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடிமைத்துவத்தின் மூலமாக அவருக்கு நபித்துவமும் கிடைத்திருக்கும்.

எனவே நபித்துவம் வந்திருப்பதாகவும், நபித்துவத்திற்குப் பிறகு கிலாஃபத் உண்டு என்றும் நீங்களே கூறியுள்ளீர்கள். ஆனால் இப்போது உங்களிடத்தில் கிலாஃபத் ஒருபோதும் தோன்றாது. நீங்கள் ஆங்கில புலமைப்பெற்ற மக்களாவீர்கள். எனவே நீங்கள் கிலாஃபத்தின் பக்கம் செல்ல மாட்டீர்கள் என்று அந்த மவ்லவி சாஹிப் கூறினார்.

இவ்வாறு அந்த நபர் கூறி இரண்டு நாட்களே கழிந்திருக்கும். அந்த நண்பர்கள் கூறுகின்றனர். அக்காலத்தில் தந்தியே தபால் நிலையத்தின் மூலமாக அனுப்பப்பட்டு வந்தது. இன்றைய நாட்களில் ஒரு நொடிப்பொழுதில் பல்வேறு தரப்பட்ட செய்திகள் இங்கிருந்து இன்டெர்நெட் மூலமாக வைரலாகி விடுவதும் உண்டு. தொலைபேசி மூலமாகவும் வைரலாகி விடுவதுண்டு. ஆனால் அக்காலத்தில் தந்திக்கான ஏற்பாடு இருந்தது. அந்த தந்தியும் கூட இரண்டாவது மூன்றாவது நாளில் தான் சிலமுறை சென்றடையும்.

ஆக எவ்வாறிருப்பினும் நமது அந்த நண்பர்கள் கூறுகின்றார்கள். ஜமாஅத் மவ்லவி நூருத்தீன் சாஹிப் அவர்களிடத்தல் பைஅத் செய்து விட்டது. மேலும் அன்னாரை கலீஃபாவாக ஆக்கிக் கொண்டது என்ற செய்தி தந்தி மூலமாக எங்களுக்கு இரண்டாவது நாள் கிடைத்தது. அஹ்மதிகள் இந்தத் தகவலை அந்த மவ்லவியிடம் கூறியபோது நூருத்தீன் சாஹிப் எழுதப்படிக்கத் தெரிந்த நபராவார்.

எனவே ஜமாஅத்தில் கிலாஃபத்தை அவர் நிலைநாட்டி விட்டார் என்று கூறினார். இனி அவருக்குப் பிறகு கிலாஃபத் நிலைபெற்றால் பின்னர் அப்போது பார்க்கலாம் என்றும் கூறினார். பின்னர் ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் மரணத்தின்போது அவர் கூறினார். இப்போது நேரம் வேறொன்றாக உள்ளது. இனி ஒருவர் கலீஃபாவாக ஆனால் அப்போது பார்க்கலாம் என்று அவர் கூறினார். அடுத்த நாளே ஜமாஅத் எனது கரத்தில் பைஅத் செய்து விட்டது என்ற தகவல் அடுத்த நாள் அங்கு சென்றடைந்தது. அதற்கு அவர் அன்பிற்குரியவர்களே! உங்களின் நிலை விநோதமாக உள்ளது. உங்களை யாராலும் புரிந்து கொள்ள முடியாது என்று அந்த மவ்லவி சாஹிப் கூறியதாக அந்த நண்பர்கள் கூறுகின்றனர்.

(நுபுவ்வத் வ கிலாஃபத் அப்னே வக்த் பர் ஜஹூர் பஸீர் ஹோதீ ஹே, அன்வாருல் உலூம் தொகுதி 18 பக்கம் 242)

ஆக, அவர் ஒரு வகையில் ஏற்றுக் கொண்டார். ஒரு வகையில் மறுத்தும் விட்டார். இன்றும் கூட சிலர் இவ்வாறுதான் கூறி வருகின்றனர். இதன் காரணமாக பொறாமை என்னும் நெருப்பு நிரந்தரமாக அவர்களிடத்தில் உள்ளது. நான் ஏற்கெனவே கூறியது போன்று ஐந்தாவது கலீஃபா தேர்ந்தெடுக்கப்பட்டபோது ஒரு மவ்லவி சாஹிப் கூறினார்: அனைத்து காட்சிகளையும் நான் கண்டேன். அல்லாஹ்வின் செயல் ரீதியிலான சாட்சியம் உங்களுடன்தான் உள்ளது என்றே தெரிகின்றது. ஆனால் இந்த அடையாளத்தைக் கண்ட பிறகும் அதனை ஒப்புக் கொள்வதற்குப் பகரமாக பொறாமை மற்றும் எதிர்ப்பு மற்றும் பகைமை ஆகியவற்றில் அவர்கள் முன்னேறிக் கொண்டே செல்கின்றனர்.

எவ்வாறிருப்பினும் கிலாஃபத்துடன் தொடர்புடைய ஜமாஅத்திற்கு அல்லாஹ் முன்னேற்றத்தை வழங்கி வருகின்றான். அந்த ஜமாஅத் உலகில் பரவி வருகின்றது. உலகில் தொலை தூர இடங்களில் மற்றும் நாடுகளில் அமர்ந்திருப்பவர்களும் கிலாஃபத்துடன் நன்றியுணர்வுள்ள தொடர்பை வைத்துள்ளனர். மேலும் அதில் முன்னேறி வருகின்றனர். அல்லாஹ் கிலாஃபத் மற்றும் ஜமாஅத்துடன் இணைந்திருப்பவர்களை எவ்வாறு வழிநடத்துகின்றான். மேலும் கிலாஃபத்தின் பக்கம் அவர்கள் எவ்வாறு வழிநடத்திச் செல்கின்றான் என்பது தொடர்பான ஒரு சில உதாரணங்களை நான் எடுத்துரைக்கின்றேன்.

அல்லாஹ்வின் செயல் சாட்சியம் உங்களிடமே உள்ளது என்று அந்த மவ்லவி கூறியதுபோன்று அல்லாஹ்வின் செயல் சாட்சியம் நம்முடன் இருப்பதற்கான ஓர் உதாரணம் இதுவாகும். இதற்கு காரணம் என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நயாகம் (ஸல்) அவர்களின் உண்மையான தொண்டர்கள் நாமே ஆவோம். அல்லாஹ்வின் உண்மையான போதனையை அதாவது அசல் போதனையை நாம் உலகில் பரப்பிக் கொண்டிருக்கின்றோம். ஒரு தொலைதூர நாடு ஒன்றிற்கு சென்று ஒரு பெண்மணி குடியேறினார். அவர் கூறுகின்றார்: ஒரு நாள் நான் கனவில் பார்த்தேன். எங்களுடைய மிஷனரி அவர்கள் எனக்கு ஒரு புத்தகம் ஒன்றைத் தருகின்றார்கள். மேலும் இந்த புத்தகத்தில் உங்களுடைய இரட்சிப்பு உள்ளது என்றும் என்னிடத்தில் கூறுகின்றார்கள்.

அந்தப் பெண்மணி தனது கனவை எடுத்துரைத்தவாறு தொடர்ந்து கூறுகின்றார்: நான் அந்தப் புத்தகத்தை திறந்தபோது அதில் ஒரு புகைப்படம் இருந்தது. அப்போது இது யார் என நான் மிஷனரி சாஹிப் அவர்களிடம் கேட்டேன். அதற்கு, இவர் கலீஃபத்துல் மஸீஹ் அவார். இப்போது இவரையே அல்லாஹ் தேர்ந்தெடுத்துள்ளான் என்று என்னிடம் மிஷனரி சாஹிப் அவர்கள் கூறினார்கள். அந்தப் பெண்மணி கூறுகின்றார்.

அடுத்த நாள் எங்களுக்கு அருகிலுள்ள மிஷனரி சாஹிப் அவர்களிடம் அந்த கனவை நான் கூறியபோது உங்கள் கனவிற்கு எந்த விளக்கத்திற்கான அவசியமும் இல்லை. அல்லாஹ்வே உங்களுக்கு வழிகாட்டி விட்டான் என்று மிஷனரி சாஹிப் அவர்கள் என்னிடம் கூறினார்கள். அப்போது அந்தப் பெண்மணி, இறைவன் மீது ஆணையாக! இன்றிலிருந்து நான் அஹ்மதியாவேன். மேலும் உள்ளபடியே அஹ்மதிகளின் கலீஃபாவை அல்லாஹ்தான்

கலீஃபாவாக ஆக்கியுள்ளான். தொடர்ந்து நிலைபெற்றிருக்கின்ற இந்த கிலாஃபத் அல்லாஹ்வால் ஏற்படுத்தப்பட்டது ஆகும் என்றும் அந்தப் பெண்மணி கூறினார்.

இவ்வாறு அப்போதே அந்தப் பெண்மணி பைஅத்தும் செய்து விட்டார். பைஅத் செய்த பிறகு ஜமாஅத்தின் அனைத்து நிகழ்ச்சிகளிலும் அவர் பங்கு பெறுகிறார். மேலும் தமது தகுதிக்கேற்ப சந்தாவும் கொடுத்து வருகின்றார். மேலும் மிகவும் தைரியத்துடன் தப்லீக்கும் செய்து வருகின்றார். மேலும் அல்லாஹ் சுயமாக எவ்வாறு தனக்கு வழிகாட்டினான் என்றும் மக்களுக்கு கூறி வருகின்றார்.

இதேபோன்று எகிப்து நாட்டின் ஒரு நண்பர் கூறுகின்றார்: நான் MTA வில் உங்களது குத்பாவை கேட்டு வருகின்றேன். நான் அதற்கு முன்பு தீமைகளில் அதிகமாக மூழ்கியிருந்தேன். நான் சண்டை சச்சரவுகள் செய்பவனாக இருந்தேன். MTA வில் உங்களுடைய குத்பாவைப் பார்த்து எனக்கு மார்க்கத்தின் பக்கம் கவனம் ஏற்பட்டது. அப்போது நான் அஹ்மதியாகி விடுவேன் என்று உறுதியும் செய்தேன். நமது கிலாஃபத் தான் சரியான முறையில் வழிகாட்டுகின்றது என்பதையும் நான் புரிந்து கொண்டேன்.

இதே போன்று வேறு சில உதாரணங்கள் இருக்கின்றன. அதில் அல்லாஹ் எவ்வாறு பல்வேறு தருணங்களிலும் மேலும் பல்வேறு இடங்களில், பல்வேறு நாடுகளில் மக்களை எவ்வாறு வழிநடத்துகின்றான் என்பதும் தெரிய வருகின்றது.

கேமரூன் நாட்டின் மர்வா நகரத்திலிருந்து மிஷனரி இன்சார்ஜ் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: மக்கள் MTA பார்த்து வருகின்றார்கள். MTA ஆப்ரிக்கா தொடங்கிய நாள் முதல் பெரும்பாலான மக்கள் MTA பார்த்து வருகின்றனர். அங்கு குறிப்பாக எனது குத்பாக்களைக் கண்டிப்பாக கேட்கின்றனர். குத்பாக்களை தொடர்ச்சியாக கேட்பதன் விளைவாக அவர்களிடத்தில் ஒரு மாற்றமும் ஏற்பட்டு வருகின்றது. ஜமாஅத்தின் பக்கமும் அவர்களின் கவனம் ஏற்பட்டு வருகின்றது. எவர்கள் ஏற்கெனவே அஹ்மதிகளாக இருக்கின்றார்களோ அவர்கள் உறுதிவாய்ந்த ஈமான் கொண்டவர்களாக ஆகி வருகின்றனர். மேலும் கிலாஃபத்துடன் தொடர்புடையவர்களாக இருக்க வேண்டும் என்பதில் அவர்கள் அதிகம் அதிகமாக முயற்சி செய்து வருகின்றனர்.

மேலும் உங்களை கிலாஃபத்துடன் தொடர்புடையவர்களாக வைய்யுங்கள். முழுமையான கட்டுப்படுதலின் முன்னுதாரணங்களை வெளிப்படுத்துங்கள். ஆக எவ்வாறிருப்பினும் இது கிலாஃபத்துடன் தொடர்பு மற்றும் அதன் மீதான நேசம் ஆகும். இது அல்லாஹ்வால் ஏற்படுத்தப்பட்டதாகும். எதுவரை அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் தொடர்பும் அன்பும் நிலைபெற்றிருக்குமோ அதுவரை அச்சத்தின் நிலையை அமைதியில் அல்லாஹ் மாற்றிக் கொண்டிருப்பான். மேலும் அல்லாஹ் மக்களின் நிம்மதிக்கான ஏற்பாட்டைச் செய்து வருவான். இன்ஷா அல்லாஹ்.

நான் பல்வேறு இடங்களுக்குச் செல்கின்றேன். சுற்றுப் பயணங்களில் மக்கள் என்னிடம் கூறுகின்றனர். அது மட்டுமல்லாமல் ஏராளமான கடிதங்களும் எனக்கு வருகின்றன. எவ்வாறு அல்லாஹ் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்ட பிறகு கிலாஃபத்துடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்கு நற்பாக்கியம் வழங்கினான் என்றும் மேலும் மிகவும் கஷ்டமான நிலையில் தாங்கள் இருந்தபோது அல்லாஹ் எவ்வாறு அமைதியை தங்களுக்கு நல்கினான் என்பதையும் மக்கள் நம்மிடம் கூறுகின்றனர்.

எனவே கிலாஃபத்துடன் தொடர்புடையவர்களாக இருந்தால் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கட்டளையின்படி அமல் செய்து வருவீர்கள். உங்களது தொழுகைகளையும் பாதுகாத்து வருவீர்கள். உள்ளத்தையும் செல்வத்தையும் தூய்மைப்படுத்தி வருவீர்கள். கட்டுபடுதலில் உயர் தரத்தை நிலைநாட்டிக் கொண்டிருப்பீர்கள். இன்ஷா அல்லாஹ். அதன் மூலம் அல்லாஹ்வின் அருட்களுக்கு வாரிசாகி விருவீர்கள். இன்ஷா அல்லாஹ்.

எனவே அஹ்மதிய்யா கிலாஃபத் மூலமாகத்தான் உலகம் ஒரே சமுதாயமாக ஆகுகின்ற காட்சியை காண இருக்கின்றது. அஹ்மதிய்யா கிலாஃபத் இன்றி அது சாத்தியமல்ல. எனவே அதனைப் பெறுவதற்காக அல்லாஹ்வின் அருளை நிரந்தரமாக பெற்றுக் கொள்வதற்காக ஜமாஅத் உறுப்பினர்களும் நம்மில் ஒவ்வொருவரும் அல்லாஹ் இந்த அருளை நம்மிடத்தில் எப்போதும் நிலைபெறச் செய்வானாக என்றும் எப்போதும் துஆ செய்து கொண்டிருக்க வேண்டும். துஆக்கள் மற்றும் அல்லாஹ்வின் அருட்களினால் நாம் முழு உலகத்தையும் முஸ்லிமாக ஆக்க வேண்டும். மேலும் ஒரே சமுதாயமாக ஆக்கக் கூடியவர்களாக நாம் திகழ வேண்டும். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடியின் கீழ் உலகை கொண்டு வர வேண்டும். அல்லாஹ் நம் அனைவருக்கும் அதற்குரிய நற்பாக்கியத்தை வழங்குவானாக.

கடந்த குத்பா இங்கு இந்த பள்ளிவாசல் திறப்பு தொடர்பான குத்பாவாக இருந்தது. அதில் ஒரு விஷயத்தை குறிப்பிட நான் மறந்து விட்டேன். அது என்னவென்றால், இந்த பள்ளிவாசலின் அடிக்கல் நாட்டப்பட்டபோது நான் பயணத்தின் காரணமாக அதாவது கனடா பயணத்தில் இருந்தேன் என்று நினைக்கின்றேன். சரியாக கூறுவதாக இருந்தால் நான் பயணத்தில் சென்று கொண்டிருந்தேன். இவர்கள் தேதியை நிர்ணயித்திருந்தபோது அந்த தேதி எனது பயணத்திற்கு பின்பான தேதியாக இருந்தது.

எவ்வாறிருப்பினும் என்னிடம் துஆ செய்து செங்கல் ஒன்றை பெற்று வந்தார்கள். இவ்வாறே இந்த பள்ளிவாசலை அடித்தளம் 2016 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 10 ஆம் தேதி மதிப்பிற்குரிய உஸ்மான் சீனி சாஹிப் அவர்கள் துஆ செய்து அடிக்கல் நாட்டினார்கள். இந்த பள்ளிவாசலுக்கான அடித்தளம் வைக்கப்பட்டதுடன் இந்த அனைத்து புராட்ஜெக்ட் கட்டுமானப் பணிகளும் ஆரம்பமாகின. எனவே இந்த பள்ளிவாசலுக்கு உஸ்மான் சீனி சாஹிப் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். என் சார்பாக அவர்கள் அந்த அடிக்கல்லை நாட்டினார்கள். இவ்வாறு நாம் அல்லாஹ்வின் அருளால் சீன சமுதாயத்தின் பங்கும் இதில் இருக்கின்றது என்று நம்மால் கூற முடியும். எனவே அல்லாஹ் சீனாவில் இஸ்லாத்தை விரைவாக பரப்புவதற்குரிய நற்பாக்கியத்தை நமக்கு தந்தருள்வானாக என்று நாம் துஆ செய்ய வேண்டும்.

சீனாவில் எப்படியாவது அஹ்மதிய்யத் மற்றும் இஸ்லாத்தின் உண்மையான தூதுச் செய்தி சென்று விட வேண்டுமென்று மதிப்பிற்குரிய உஸ்மான் சீனீ சாஹிப் அவர்கள் மிகவும் ஆசைப்பட்டு வந்தார்கள். மேலும் அன்னார் கவலைப்பட்டும் வந்தார்கள். நாம் அன்னாருடைய அந்தஸ்துகளின் உயர்விற்காக துஆ செய்கின்ற அதே தருணத்தில் சீனாவிலும் உலகின் ஒவ்வொரு நாட்டிலும் அஹ்மதிய்யத் மற்றும் உண்மை இஸ்லாம் பரவுவதற்கு அதிகமாக துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் அதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக.


**திருக்குர்ஆனிலிருந்து...**

அல்லாஹ்வின் வசனங்கள் ஓதிக் காண்பிக்கப்படுபவர்களாக நீங்கள் இருக்கும் நிலையிலும், அவன் தூதர் உங்கள் மத்தியில் இருக்கும் நிலையிலும் நீங்கள் எவ்வாறு நிராகரிப்பீர்கள்? அல்லாஹ்வின் பாதுகாப்பை பெற்றவர்கள், நேரான பாதையில் நடத்தப்பட்டுள்ளார்கள் (என்று அறிக). (3:102)

Faizal Hameed Ilahi
மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian — பதர் வாரப் பத்திரிகை காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 4 Thursday 04 July 2019 Issue No. 27

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

அறிவார் எனில் அவரே வெற்றி பெறுவார். அந்த போரின் நோக்கம் மற்றும் குறிக்கோள் நம்பிக்கையாளர்களின் மறைவாக இருந்த வீரத்தை வெளிப்படுத்துவதாகும் மேலும் இறைவன் எவ்வாறு விரும்பினானோ அதனை மிகமேலாக உலகில் வெளிப்படுத்தினான். இப்போது அதன் தேவை இல்லை, எனவே இப்போது போரானது கலை மற்றும் ஏமாற்று மற்றும் வஞ்சத்தின் வடிவத்தைப் பெற்றுவிட்டது மேலும் புது புது போர் ஆயுதங்கள் மற்றும் இக்கட்டான வித்தைகள் அதன் விலை மதிப்பில்லா பெருமையின் தன்மையை மண்ணோடு கலந்துவிட்டது. ஆரம்பகால இஸ்லாத்தில் தற்காப்பு போர்களும் உடல் ரீதியான போர்களும் எதனால் அவசியமாக இருந்தது எனில் அந்த நாட்களில் இஸ்லாத்தின் பக்கம் அழைப்பவர்களுக்கு பதில் ஆதாரம் மற்றும் சான்றுகள் மூலம் அல்லாமல் வாளால் தரப்பட்டு வந்தது. எனவே வேறு வழி இன்றிப் பதிலுக்குப் பதில் வாள் பயன்படுத்தப்பட்டது. ஆனால் இப்போது வாளால் பதில் தரப்படுவது இல்லை,

மாறாக பேனா மற்றும் சான்றுகள் மூலம் இஸ்லாத்தின் மீது குறை கூறப்படுகிறது. இதன் காரணமாகவே இந்த காலத்தில் வாளின் பணிகளை பேனாவின் மூலம் வாங்க, மேலும் எழுத்தின் மூலம் எதிர் கொண்டு எதிரிகளுக்குத் தோல்வியை தர இறைவன் விரும்பி உள்ளான், எனவே இப்போது பேனாவின் பதில்களை வாளால் தர முயற்சி செய்வதற்கு யாருக்கும் தகுதி இல்லை. கர் ஹிஃபஸ் மராதிப் நகனீ ஸன்தீகீ அதாவது இதனை நினைவில் கொள்ளவில்லை எனில் அது துரோகம் ஆகும்.

### தற்போது பேனாவின் தேவை உள்ளது

இப்போது அவசியம் உள்ளது எனில் அது நிச்சயமாக வாளினுடையது அல்ல மாறாக பேனாவினுடையது என்பதை புரிந்து கொள்ளுங்கள். இஸ்லாத்தின் நமது எதிரிகள் எந்த சந்தேகங்களை தொடுத்து உள்ளார்களோ மேலும் பல்வேறு அறிவியல் மற்றும் வஞ்சகத்தின் வாயிலாக இறைவனின் உண்மை மார்க்கத்தின் மீது தாக்குதல் தடுக்க நாடியுள்ளனர். நான் பேனாவின் போர் கவசத்தை அணிந்து இந்த அறிவியல் மற்றும் அறிவின் வளர்ச்சியின் களத்தில் இறங்கி, ஆன்மீக தீரத்ததை மற்றும் உட்புற ஆற்றலின் அதிசயத்தை காண்பிப்பதற்கு அவன் எனக்கு கவனமூட்டி உள்ளான். நான் இந்த களத்திற்கு தகுதி உள்ளவனாக எப்போது ஆகமுடியும்?

என்னைப் போன்ற பணிவான மனிதனின் கரங்களால் மார்க்கத்தின் கண்ணியம் வெளிப்பட வேண்டும் என்பது இறைவனின் விருப்பமாகும், இது இறைவனின் அருள் மட்டுமே ஆகும், மேலும் அவனின் எல்லையில்லா கருணை ஆகும். நான் ஒரு சமயம் நமது எதிரிகள் இஸ்லாத்தின் மீது செய்துள்ள இந்த ஆட்சேபணைகள் மற்றும் தாக்குதல்களை எண்ணினேன், அதன் எண்ணிக்கை அப்போது எனது சிந்தனை மற்றும் கணிப்பின் படி மூன்று ஆயிரம் ஆக இருந்தது மேலும் இப்போது எண்ணிக்கை அதிகமாகி இருக்கும் என நான் நினைக்கிறேன். மூன்று ஆயிரம் ஆட்சேபணைகள் செய்யப்படக் கூடிய பலவீனமான விசயத்தின் மீதே இஸ்லாம் நிறுத்தப்பட்டுள்ளது என்று யாரும் நினைத்துவிட வேண்டாம், இல்லை அவ்வாறு ஒருபோதும் இல்லை. இந்த ஆட்சேபணைகள் கற்பனையாளர்கள் மற்றும் அறிவற்றவர்களின் பார்வையில் ஆட்சேபணைகள் ஆகும்

ஆனால் நான் உங்களிடம் உண்மையாக உண்மையாக கூறுகிறேன் நான் இந்த ஆட்சேபணைகளை எங்கு கணக்கிட்டேனோ அங்கு இந்த ஆட்சேபணைகளின் கீழ் உண்மையில் மிகவும் உன்னதமான சான்றுகள் இருப்பதையும் சிந்தித்தேன் அது பார்வை இன்மையின் காரணமாக அவர்களுக்குத் தெரியவில்லை மேலும் உண்மையில் இது இறைவனின் மதிநுட்பமாகும் எங்கு பார்வை இன்றி ஆட்சேபிப்பவர் வந்து சிக்குகிறாரோ அங்கு உண்மையின் மற்றும் ஞானத்தின் மறைவான கருவூலம் வைக்கப்பட்டு உள்ளது.

(மல்ஃபூஸாத் பாகம் 1, பக்கம் 49 முதல் 51, பதிப்பு 2018 காதியான்)

## திருக்குர்ஆனிலிருந்து...

(மக்களே) நன்மையின் பக்கம் அழைக்கவும் நல்லவற்றைப் போதித்து தீமையைத் தடுக்கவும் செய்யும் ஒரு கூட்டம் (எப்போதும்) உங்களிடையே இருந்து வர வேண்டும். இவர்களே வெற்றி பெறுவோர். (3:105)

A.Nasir Ahmad
அமீர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், மேலப்பாளையம்

## திருக்குர்ஆனிலிருந்து...

நிராகரிப்போர், இவருக்கு இவருடைய இறைவனிடமிருந்து எந்த அடையாளமும் ஏன் இறக்கப்படவில்லை என்று கூறுகின்றனர். (ஆனால்) நீர் (அச்சமூட்டி) எச்சரிப்பவரேயாவீர். மேலும் ஒவ்வொரு சமுதாயத்தினருக்கும் (இறைவனிடமிருந்து அனுப்பப்பட்ட) வழிகாட்டியொருவர் உண்டு. (13:8)

A.Shamsul Alam
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

## நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்

தினந்தோறும் காலை 9.00 மணியிலிருந்து 11.00 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

**தொலைபேசி எண்:**

***1800 425 40000***

இந்த **TOLL FREE** எண்ணில் ஃபோன் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

**காதியானில் 125 –வது ஆண்டு மாநாடு 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27, 28, 29 ஆகிய தேதிகளில் நடைபெறும் இன்ஷா அல்லாஹ்**

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் மூஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய..) அவர்கள் காதியானில் நடைபெறும் 125 –வது ஆண்டு மாநாடு 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27, 28, 29 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்கள். ஜமாஅத் சகோதரர்கள் இப்போதிருந்தே துஆக்களுடன் இந்த அருளுக்குரிய ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நிய்யத் வைத்து மாநாட்டில் கலந்து கொள்வதற்கு ஆயத்தம் ஆகுங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் இந்த ஆன்மீக மாநாட்டில் கலந்து கொண்டு அதன் அருள்களிலிருந்து பலன் பெறுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! இந்த ஆண்டு மாநாடு எல்லா வகையிலும் வெற்றி பெறுவதற்கும், அருளுக்குரியதாக இருப்பதற்கும், நல்ல ஆன்மாக்கள் நேர்வழி பெறுவதற்கு காரணமாக அமைவதற்கும் துஆக்கள் செய்து வாருங்கள். ஜஸாகுமுல்லாஹ் அஹ்ஸனல் ஜஸா. (நாஸிர் இஸ்லாஹ்–வ–இர்ஷாத் மர்கஸிய்யா காதியான்)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad